நகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 5 புதன்கிழமை (19.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 174

# மீள்குடியேறும் மக்களுக்கான உதவிகள் தடைப்படும் ஆபத்து!

## ஐ.நாவின் நிதிவளங்கள் குறைந்து வருவதன் விளைவு!!

கொழும்பு, மே 19



**வன்னிப் பிரதேசத்தில் மீளக்குடியேறி வரும் மக்களுக்காக வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகள் தடைப்படும் ஆபத்து ஏற்பட்டுவருவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி நீல் புஹ்னே எச்சரிக்கையும் அதேவேளை கவலையும் வெளியிட்டுள்ளார்.**

* போதிய நிதியின்மை காரணமாக இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவோருக்கான கொடுப்பனவுகள் பாதிக்கப்படலாம். நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவது தாமதமாகலாம், இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களின் நிலைமை மேலும் மோசமடையலாம் -
* யுத்தத்துக்கும் பிந்திய (எதிர்விளைவுகளை நிவர்த்தி செய்து) பலாபலன்களை உறுதிப்படுத்த வேண்டிய வேளையில் சர்வதேச சமூகம் பல காரணங்களுக்காக இலங்கை மீதான தனது ஆர்வத்தை இழந்துவருகிறது.
* மோதல்கள் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து சன நெரிசல்மிக்க முகாம்களில் வாழும் மோசமான காட்சிகளை அவர்களால் தற்போதும் காணமுடிந்தமையே இதற்குக் காரணம். அதனால் மோசமான சூழ்நிலை நிலவும் ஹெய்டி போன்ற நாடுகளுக்கு மட்டுமே நிதியுதவி செல்கிறது - என்றும் அவர் ஐ.நா.சபையின் இயலாத்தன்மையை விவரித்தார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிப் பிரமுகர் கல்கிசையில் கைது!

கொழும்பு, மே 19

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கிய பிரமுகர் ஒருவர் கல்கிசையில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீதரன் ஐங்கரன் என்ற இந்த நபர், கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்குப் புறப்படத்தயாராக இருந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## 16 பக்கங்களுடன் மட்டுமே...

திடீர் மழை, கடுங்காற்றினால் குடாநாட்டில் ஏற்பட்ட மின்தடையினால், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உங்கள் அபிமான உதயன் நாளிதழ் பதினாறு பக்கங்களுடன் மட்டுமே இன்று வெளிவருகிறான். பொறுத்தருள்க.

நிர்வாகத்தினர்.

## இரசாயனக் கொள்கலன் தீப்பற்றியதால் கொழும்புத் துறைமுகத்தில் புகைமூட்டம்

### சுவாசிக்க முடியாமல் மக்கள் திணறல்

கொழும்பு, மே 19

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரசாயனக் கொள்கலன் ஒன்று நேற்று இரவு 8 மணியளவில் தீப்பற்றிக் கொண்டது.

துறைமுகத்தில், கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயத்துக்கு பின்புறமாக உள்ள பகுதியிலேயே இந்தக் கொள்கலன் தீப்பற்றியது. உடனே அதிலிருந்து பெரும் புகை மேலெழுந்தது. சுமார் 3 மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இந்தப் புகை வெளியேறிமையால் கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை உள்ளிட்ட பகுதிகள் நேற்று முன்னிரவு முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தன.

கொச்சிக்கடை பகுதியிலுள்ள வீடுகள், கடைகள் எல்லாமே புகைமூட்டத்தில் மறைந்துபோயின. இந்தப் புகையைச் சுவாசிக்க முடியாமல் அப்பகுதி மக்கள் திணறினர். அந்தப் பகுதியிலிருந்து வெளியேறி கதிரேசன் வீதி, செட்டியார் தெரு போன்ற பகுதிகளுக்குச் சென்று, புகைமூட்டம் கலைந்த பிறகே மீண்டும் மக்கள் வீடுகளுக்குச் சென்றனர்.

கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை பகுதி வீதிகளில் வாகனங்கள் செல்வதும் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.

'கொன்ரெயினர்' ஒன்றினுள் இருந்த சிறு கொள்கலன் ஒன்றே வெடித்தது எனவும், அதனைத் தொடர்ந்து அதற்குள் இருந்த ஏனைய கொள்கலன்களும் தீ பிடித்தமையால் புகை மேலெழுந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கிய கொன்ரெயினர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் மழை வெள்ளம் சென்றமையால், கொள்கலன் ஒன்றினுள் மழை நீர் புகுந்துள்ளது. இதனால்தான் இரசாயனத்தாக்கம் நிகழ்ந்து இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது. (அ-சி)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, மே 19

ஜி - 15 நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஈரான் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுக் காலை நாடு திரும்பியுள்ளார். இதேவேளை ஜி-15 நாடுகளின் 15ஆவது உச்சிமாநாடு இலங்கையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் மழையினால் குடாநாட்டில் நேற்றிரவு மின்சாரம் தடைப்பட்டது; போக்குவரத்தும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 19

திடீரென உருக்கொண்ட காற்றுடன் கூடிய சுமாரான மழை காரணமாக நேற்றிரவு குடாநாட்டுக்கான மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது. வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்து மக்கள் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

திடீர் காற்றும் மழையும் குடாநாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பாதிப்புக்களைத் தந்ததாக உதயனின் பிரதேசச் செய்தியாளர்கள் அறியத்தந்தனர்.

மழை காரணமாகக் குடாநாட்டின் பிரதான வீதிகளில் நீர் தேங்கிக் காணப்பட்டது. கடும் காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் சில வீதிகளும் தடைப்பட்டன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற வளாகமும் வெள்ளத்தில்; நண்பகலுடன் அமர்வுகள் நிறுத்தம்

கொழும்பு, மே 19

தற்போதைய அடைமழை காரணமாக நாடாளுமன்ற வளாகத்திற்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள வீதிகள் நீரால் மூடப்பட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நலன்கருதி நேற்று நாடாளுமன்ற அமர்வு இடைநடுவில் ஒத்திப்போடப்பட்டது.

சில நாள்களாகப் பெய்த அடைமழை காரணமாக நாடாளுமன்றத்தைச் சுற்றி ஓடுகின்ற தியவன்ன ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்து நாடாளுமன்றத்திற்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுவரை நாடாளுமன்ற வளாகத்திற்குள் உள்ள ஒரு சில வீதிகளில் நீர் நிரம்பியது. இதனால் நாடாளுமன்ற ஊழியர்களும்,

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு உட்பட தென்மாவட்டங்களில் அடை மழை இரண்டு லட்சம் பேர் பாதிப்பு! இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம்!!

## 10 பேர் பலி; சீரற்றகாலநிலை தொடரும் என அறிவிப்பு

கொழும்பு, மே 19

தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றும் மழை கொட்டியது. கடந்த சில நாள்களாகத் தொடர்ந்த அடைமழையால் தெற்கில் 2 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அல்லோலகல்லோலப்பட்டனர். நேற்று மாலைவரை பத்துப்பேர் மழை வெள்ளத்தால் உயிரிழந்தனர். மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

கொழும்பு,களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், காலி மற்றும் புத்தளம் மாவட்டங்களிலேயே கூடுதலான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டமே அடைமழை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தொடர் மழை காரணமாக நேற்றும் கொழும்பின் இயல்பு வாழ்க்கை பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது.

நகரின் பல பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பல இடங்களில் ஓர் அடிக்கு மேல் வெள்ளம் தேங்கிநின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

காலியிலும் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

இதேவேளை, தொடரும் மழை காரணமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமானங்கள் புறப்படுவதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்கா பிரதான

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுக்கு அனுமதி மறுப்பு

முள்ளிவாய்க்காலில் பலியாகிய தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு இறுதி நேரத் தில் கைவிடப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் நேற்றுக் காலையிலே அந்த அலுவலகப் பகுதிக்குச் சென்ற படையினர் அலுவலகத்துக்குள் செல்ல எவருக்கும் அனுமதி வழங்கவில்லை என்றும் அதன் காரணமாக நிகழ்வுகளில் கலந்து கொள்ள வந்தவர்கள் திரும்பி சென்றனர் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அஞ்சலி நிகழ்வுக்கு அனுமதி மறுக்கப் பட்டமைதொடர்பாக படை அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் நிகழ்வுக்கு அனுமதி வழங்கமுடியாது என்று பதில் அளிக்கப் பட்டதாகவும் முன்னணியின் பிரமுகர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். (ஒ-1-16)


# ஸ்ரீ ராம் ஜிம்

இணுவில்

ஸ்ரீராம் ஜிம் ஆனது தனது 12 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 1000 ரூபாவாக இருந்த பயிற்சி அனுமதிக் கட்டணம் 500 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இச்சலுகையானது இம்மாதம் 19.05.2010 - 31.05.2010 ஆம் திகதிவரை மட்டுமே. அத்துடன் இவ்வாண்டில் இருந்து பெண்களுக்கான பயிற்சியும் ஆரம்பிக்கப்படும்.




இயக்குநர்: Sri Ram Gym Inuvil





இன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டமளிப்பு விழாவில் தகவல் தொழில்நுட்பமானி பட்டத்தை பெறும் எமது

நிறுவன விரிவுரையாளர்
பஞ்சாட்சரம் அசோக்தா
BIT(uni.Col).MCSE (Sp.Network Security)

அவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

— விரிவுரையாளர்கள்,
1ம்,2ம்,3ம் மற்றும் புதுமுக BIT, FIT மாணவர்கள்

WWW.MCSITCAMPUS.ORG
324, Palaly Road, Campus junction, Jaffna


## மின்சாரசபை ஊழியருக்கு விரைவில் சீருடை

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு இலங்கை மின்சார சபை சின் னம் பொறிக் கப்பட்ட சீருடை விநியோகிக்கப்படவுள்ளன.

கடும் சிவப்பு நிற ரீ சேட்டில் மஞ் சள் நிறத்தில் இ.மி.ச. சின்னம் பொறிக் கப்பட்ட சீருடை வழங்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-207)


## முக்கிய அறிவித்தல்

எமது ஆலயக் கொடியேற்றம் 21.05.2010 ஆரம்பமாகின்றது. ஆகவே அன்னதானச் சபைக்கு அடியார்கள் வழங்கும் பணம் பற்றுச்சீட்டின்றி எவரிடமும் வழங்க வேண்டாம் என்பதையும், பணம் வழங்க விரும்புபவர்கள் எமது ஆலய கொமஷல் வங்கிக் கணக்கினூடாகவும் வழங்கலாம் என்பதையும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

வங்கிக் கணக்கு இலக்கம் : 8060026695

அராலி ஆவரம்பிட்டி,
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

தகவல் :
அன்னதானச் சபையினர்

(இ/567733)

## தவறிவிட்டது

தாவடி வடக்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை கருணாமூர்த்தி என்பவரது தே.அ.அ.(693200709 V), மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்த பற்றுச்சீட்டு, இரண்டு A.T.M. Card மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் 14.05.2010 அன்று தாவடிப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P. 0779797421 / 0778697528

## அழகுக்கலைப் பயிற்சி வகுப்பு

பிரபல அழகுக்கலை நிபுணரால் யாழ்ப்பாணத்தில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நீங்களும் இப்பயிற்சியில் சேரவிரும்பினால், கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். அடிப்படைப் பயிற்சியிலிருந்து சகல பயிற்சிகளும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : சங்கக்கடை வீதி,
(டல்ரன் அக்கடமிக்கு முன்பாக),
துன்னாலை, கரவெட்டி.
தொ.பே. இலக்கம் : 0778893460, 0775098103

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம்

மீண்டும் யாழில்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம், நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப்பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு-பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

மானிப்பாய் வீதியில் ஜனசக்திக்கும் வைத்தீஸ்வராச் சந்திக்குமிடையில் "செல்வ மாளிகை" இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
T.P: 0719315664, 0777569205

## தேவை

நிறுவனமொன்றுக்கு யாழ். நகரப் பகுதியில் கடையொன்று வாடகைக்குத் தேவை. அத்துடன் முச்சக்கர வண்டிக்கு சாரதி தேவை.

தொடர்புகளுக்கு : இல.56, [illegible]
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
T.P. 0771093300 / 0776647976

## தவறிவிட்டது

இருபாலை வீதி, கோண்டாவில் எனும் முகவரியுடைய கணேசலிங்கம் சுரேன் என்பவருடைய தே.அ.அ.(900713428 V). மேற்படி முகவரியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு : கணேஸ் ஸ்ரோர்ஸ்,
இல.270, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். T.P. 0779596651

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையத்தில் வவுனியா செல்லும் தனியார் பேருந்தில் எனது ரவலிங் பை தவறிவிட்டது. அதில் இலங்கை வங்கி, கொமஷல் வங்கி கணக்குப் புத்தகங்கள், மற்றும் முக்கிய ஆவணங்கள், பெறுமதியான பொருள்கள் உள்ளன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

சண்முகராசா சதீஸ்குமார், 106, செம்மணி வீதி,
நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். T.P. 0775378349

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி மற்றும் புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு : த. குமாரசாமி அன் சன்ஸ்,
248, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். T.P. 0773186842


## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி சிவஞானம்



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கலைநகர், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சிவஞானம் 16.05.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், சிவானந்தன் (லண்டன்), விமலாதேவி (லண்டன்), கமலாதேவி, சச்சிதானந்தன் (லண்டன்), பரமானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஐயாத்துரை, அருட்பிரகாசம், சரஸ்வதி, ஜெயசாந்தி, சிவச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமேனி, ராசம்மா, பரஞ்சோதிஅம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
வட்டு. வடக்கு, சித்தன்கேணி. (98528)

தகவல் :
குடும்பத்தினர்

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி ஜெகசோதி சிவசுப்பிரமணியம்
அவர்களின் அன்புச் சகோதரி

### கனகசபை தவசோதி

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]
யா/நடேஸ்வர கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### அன்ரன் றெக்ஸ் ராஜினி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் றெக்ஸ் ராஜினி 17.05.2010 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நசரேத் (மோசஸ்) - அலங்காரம் தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற தாவீது (சின்னராசா) மற்றும் றோஸ் தம்பதிகளின் அன்பு மருமகளும், இன்பம் - அன்னம்மா தம்பதிகளின் பெறாமகளும், அன்ரன் றெக்ஸின் பாசமிகு மனைவியும், சுஜந்தனின் அன்புத் தாயாரும், மெனிஸ்ரலாவின் அன்பு மாமியும், டெலா, டெல்மா, டெனி, டெசி, வவா, பாப்பா, செல்வி, ராசா, குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம்மா, மாலினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், காலஞ்சென்ற எஸ்தாக்கி மற்றும் ராயப்பு (யாழ். பல்கலைக்கழக சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்), பரா, திருவருள், நந்தன், சுபா, அரவிந்தன், சிவாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கம்சிகாவின் அன்புப் பேர்த்தியும், பப்பாச்சி, குணம் (அந்தியகால சேவை, வாத்தியக்குழு, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு அண்ணியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக பிப்பிலி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
றெக்ஸ் - 0775081768, குணம் - 0776262414
பப்பாச்சி - 0777176998
(அந்தியகால சேவை வாத்தியக் குழுவினர், யாழ்ப்பாணம்)

கட்டுடை. (97532)

### வீரவாகு நடராசா (உஷா நடராசா)
### (சமாதான நீதவானும், முன்னைநாள் திடீர் மரணவிசாரணை அதிகாரியும்)

கவுந்தில், கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு நடராசா நேற்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் வசந்த (ஆசிரியை, யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), பாஸ்கரன் (SHAP GRAPHIC PVT. LTD, கொழும்பு), சாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகானந்ததாஸ் (ஆசிரியர், யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலை), கலையரசி (கொழும்பு), லோகராஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் பாவலன், கவிதன், கீதனன், அபிராமி, யாமினி, சகானா, விசாகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி
தொ.பே. 021 226 4960

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### காசிப்பிள்ளை ஆறுமுகம் (V.C, முன்னாள் கணக்காளர், அப்பையா அன்கோ புடைவையகம்)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை ஆறுமுகம் நேற்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

### மாணிக்கர் தம்பிப்பிள்ளை



குப்பிளான், கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் தம்பிப்பிள்ளை (மணியம்) கடந்த 15.05.2010 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கர் - நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கலைச்செல்வி (சுவிஸ்), கிருபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தை யும் திருக்குமார் (சுவிஸ்), சிறீகௌரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கரன், சங்கவி, தனுசன், சாருஜா, பவித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் தங்கம்மா (உக்கிளாங்குளம், வவுனியா), காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (பவுண், உக்கிளாங்குளம், வவுனியா), பூமணி மற்றும் நடராஜா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்றவர்களான தம்பிமுத்து, பூதப்பிள்ளை, சரஸ்வதி மற்றும் பொன்னம்பலம், சண்முகராசா, இரத்தினம்மா, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
குப்பிளான்.

தகவல்:
இரா. ஜெயக்குமார்
(பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பான் கீ - மூன் பதிலளிப்பாரா?

கடந்த மேமாதம் 18ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் வெற்றியீட்டியதன் பொருட்டு, அரசாங்கம் நேற்றுமுதல் மூன்று நாள்களுக்கு நாடுமுழுவதிலும் வெற்றிவிழாக்களை ஆரம்பித்தது. நாளை வியாழக்கிழமை, கொழும்பு காலி முகத்திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வெற்றிவிழா மிகப் பிரமாண்டமான முறையில் நடைபெறவிருந்தது. எனினும் தெற்கின் ஒவ்வாத காலநிலைகாரணமாக அது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

போரின் கடைசிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கொன்று குவிக்கப்பட்டது குறித்தும், அரசு மூடிமறைத்து வைத்திருக்கும் போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச போர்முறைகள் மீறப்பட்டமை குறித்தும் பல சர்வதேச மனிதநேய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அரசாங்கத்தை நோக்கிப் பல கேள்விக் கணைகளை எறிந்துள்ளன. இந்த ஒரு வருட காலத்தில் இலங்கை அரசாங்கம் இத்தகைய பல கூரிய கணைகளைக் கூட பல கைக்கேடயங்களை அணிந்து சாதுரியமாக தட்டி வீழ்த்தி வருவது உலகறிந்த ஒன்று.

ஆனால் இவ்வாறு நீண்டகாலத்துக்குத் தொடர்ந்து கொண்டிருக்க முடியாது என்பதை உணர்வதற்கு அது விடாப்பிடியாக மறுத்துவருகிறது. தனது தந்திரோபாயங்கள் எப்போதும் வெற்றிதரும் என்ற மெத்தனப் போக்கில் செயற்பட்டு வருகிறது.

உலகப்பொதுமன்றமான ஐக்கிய நாடுகள் சபையையே, போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவைக்கும் அதன் முயற்சியை தோற்கடித்துவிட்டதான இறுமாப்புடன் செயற்பட்டு வருகிறது. அதுபோன்றே ஏனைய உலகப் பொதுவிதிகள், பொதுமுறைகளை அனு சரித்து அரசு செயற்படவேண்டும் என்ற ஒரு நாக ரிக நாட்டுக்குரிய பொறுப்பை தூக்கிக் கடாசிவிட்டுச் செயற்படுகிறது!

இவற்றுக்கு இடையில் -

இலங்கையில் கடந்த வருடம் மே மாதத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று ஐ.நா.சபையின் மனித உரிமைக்கான முன்னாள் ஆணையர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் குரல் கொடுத்திருக்கிறார். அதனை ஆராய்வதற்கு 'சர்வதேச நெருக்கடி நிலை குறித்த குழு' மூலம் களத்தில் இறங்கப்போவதாகவும் அறிவித்திருந்தார். அந்த விசேட குழுவின் மூலம் வன்னியில் இறுதி யுத்தத்தின் போது, சர்வதேச போர்ச்சட்டங்கள் மீறப்பட்டனவா என்பதனை விசாரணைகளை நடத்தி வெளிக்கொணரப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

இவை மட்டுமன்று -

வன்னியில் நடைபெற்ற போர்க்குற்றங்களைக் கண்டறியும் விடயத்தில் ஐக்கியநாடுகள் சபைமீதும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் தாம் தலைமை வகிக்கும் 'சர்வதேச நெருக்கடி நிலை குறித்த குழு' இதனைச் செய்யப்போவதாகவும் ஆர்பர் அம்மையார் அறிவித்திருந்தார்.

இத்தகைய பின்புலத்தில் -

இலங்கையின் உள்நாட்டு மோதல்களின் இறுதிக்கட்ட சம்பவங்கள் குறித்து தான் அறிந்தவற்றைத் தானும் ஐக்கியநாடுகள் சபை அம்பலப்படுத்தவில்லை என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகிடைப்பதற்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டியுள்ளது.

வீடு கொளுத்தும் மந்திரிக்கு கொள்ளிகொடுத்த சேவகன் போன்ற மிகவும் கீழ்த்தர நிலையில் ஐக்கிய நாடுகள் சபையினரும் பொதுச் செயலாளர் பான் கீ - மூனும் இலங்கை அரசின் பக்கம் சார்ந்து செயற்பட்டிருக்கிறார்கள் என்பது, இப்போது அம்பலமாகியுள்ளது! சர்வதேச மன்னிப்புச்சபை சுயாதீனமான நடுநிலையான ஒரு நிறுவனம், உலகப் பிரசித்தமானது. பல விவகாரங்களில் தனது உண்மைத் தன்மையையும் நேர்மையையும் வெளிப்படுத்திப் புகழ்பெற்றது.

வன்னியில் இறுதிக் கட்டப் போர் நிகழ்ந்த பின்னர் பிரிட்டனின் "சனல் 4" பல வீடியோப் படங்களை வெளியிட்டபோதிலும், அவற்றை அசட்டை பண்ணாமல் இலங்கைப் போர்க் குற்றங்கள் குறித்த பொறுப்புக் கூறும் விடயத்தை வலியுறுத்திச் செயற்படாமல், ஒளித்து விளையாடியவர் பான் கீ - மூன்.

அதுமட்டுமா?

இலங்கையின் இந்த விவகாரம் குறித்து தமக்கு ஆலோசனை கூறுவதற்கு விசேட நிபுணர் குழு ஒன்றை நியமிக்கப்போவதாக அறிவித்துவிட்டு, பல மாதங்களாக பம்மாத்துக் காட்டிவரும் பான்-

இது விடயமாக இலங்கை அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்காக, தமது உயர் பிரதிநிதியான லைன் பஸ்கோ என்பவரை இங்கு அனுப்பவதாகக் கூறி காலத்தைக் கடத்திவருகிறார்.

கீ மூன் இலங்கை அரசுடன் சேர்ந்து விளையாடுகிறார் என்று சர்வதேச அவதானிகள் பலரும் சந்தேகம் வெளியிட்டு வந்தனர். அது மெய்யானதே என்று எவரும் உணர்ந்து கொள்ளும் வகையில் சர்வதேச மன்னிப்புச் சபை விடயத்தைபோட்டு உடைத்திருக்கிறது!

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரா கரிக்க அவரிடம் நேர்மை உண்டா என்பது வேறு விவ காரம்.

உலகப் பொதுமன்றத்தின் மிகுந்த உயர் நிலையில் உள்ள அதிகாரி ஒருவர் இவ்வாறு செயற்பட்டிருப்பது வெட்கத்திலும் வெட்கம்!

அந்தப் பதவிக்குரிய மதிப்பைப் பேணுவதற்காக வேனும், அவர் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு உடனடியாக, எவ்வித தாமதமும் காட்டாமல் நேர்மையுடன் பதில் அளிக்க வேண்டும். வெறும் சளாப்பல், சதுப்பல் நிலைக்குச் செல்லாமல், அவர் உண்மையை வெளிப்படுத்துவாரா?

# அவுஸ்திரேலியாவுக்குள் ஆள்களை கடத்துவோருக்கு கடும் தண்டனை

## புதிய சட்டம் அங்கு அமுலுக்கு வந்தது

கொழும்பு,மே19

வெளிநாட்டவர் அவுஸ்திரேலியாவுக்குள் கடத்தப்பட்டு கொண்டு வரப்படுவதைத் தடைசெய்வதற்கு விரிவான அதிகாரங்களைக் கொண்ட புதிய சரத்துக்களை அந்நாட்டு நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தச் சட்டப் பிரிவுகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதை அவுஸ்திரேலிய அரசு வரவேற்றுள்ளது.

அவுஸ்திரேலிய சட்டமா அதிபரும் எம்.பியுமான றெபேட் மெக்கிளென்ட், குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் செனேட்டர் கிறிஸ் இவான்ஸ், உள்துறை அமைச்சர் பிரென்டன் ஒகொன்னர் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் கடத்தப்படுவதற்கு எதிரானதும் வேறு நடவடிக்கைகளுக்குமான 2010ஆம் ஆண்டுக்கான இப்புதிய சட்டவிதிகளாவன:-

* ஆள்கள் கடத்தப்படுவதையும் மற்றும் பாரதூரமான எல்லைப்புற அச்சுறுத்தல்களை குறிப்பாக புலனாய்வு செய்வதற்கு அவுஸ்திரேலிய பாதுகாப்பு புலனாய்வுத்துறையினருக்கு அதிகாரம் அளிக்கின்றன.

ஆள்கள் கடத்தப்படுவதற்கு நிதி வசதிகளை செய்துகொடுப்போர் மற்றும் வேறுவிதமான ஆதரவுகளை வழங்குவோர் தொடர்பாகவும் ஆராய்ந்து தண்டனை வழங்குவதையும் இந்தச் சட்டம் உள்ளடக்கியுள்ளது. இச்சட்டத்தின் வேறு பல அம்சங்கள் பின்வருமாறு அமைகின்றன:-

* ஆள்கள் கடத்தப்படுவதற்காக பொருள் ரீதியில் உதவிகள் வழங்கப்படும் புதிய குற்றங்களுக்கு உயர்ந்த பட்சம் 10 வருட சிறைத்தண்டனை அல்லது ஒரு லட்சத்து 10ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படும்.

* ஆள்கள் கடத்தல் விடயத்தில் சுரண்டல்கள், உயிராபத்து அல்லது பாரதூரமான இடைஞ்சல் ஏற்படுமிடத்தில் அதிகபட்சமாக 20 வருட சிறைத்தண்டனை அல்லது 2 லட்சத்து 20ஆயிரம் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்படும்.

* ஆள்கள் கடத்தப்படுதல் விடயத்தில் ஒருவர் பல குற்றங்களை இழைத்திருக்கும் பட்சத்தில் இடம்பெயர்தல் தொடர்பான சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தண்டனை வழங்கப்படும்.

ஆள்கள் கடத்தப்படுவது தொடர்பில் வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் மற்றும் அவர்களின் வலையமைப்புகளிடம் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ள சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. (ப)

# வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் இளம் பெண்களின் போசாக்கு மதிப்பீடு

## நாளை யாழ்.நகரில் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றும் இளம் பெண்களின் போஷாக்கு நிலையை மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்றை யாழ்ப்பாண வணிகர் கழகம் முன்னெடுக்கவிருக்கிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ்.நகர வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் இளம் பெண்களுக்கான மதிப்பீடு நாளை ஆரம்பமாவிருக்கிறது.

இதுதொடர்பாக அச்சங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல தசாப்தங்களாக யாழ். மாவட்ட கர்ப்பவதிகளில் 33 வீதத்துக்கும் மேற்பட்டவர்கள் 18.5 இற்கு குறைவான உடற்திணிவுச் சுட்டியைக் கொண்டுள்ளனர். இவர்களின் 40 வீதம் - 50 வீதத்திற்கு மேற்பட்டோர் அனீமியா குறைபாடுடைய வர்களாக (11g/DL) காணப்படுகின் றார்கள்.

இப்பாதிப்புக்குள்ளான அனேகமான பெண்கள் ஆரோக்கியமான குழந்தைப் பேற்றை அடைய முடியாதுள்ளார்கள். ஆரோக்கியமான உணவு உட்கொள்ளுதல் தொடர்பான போதிய அறிவின்மை, பொருளாதாரப் பிரச்சினைகள் என்பன இதற்கான முக்கிய காரணமாக இனங்காணப்படுகின்றன.

இளம்பெண்களே எதிர்காலத் தாய்மார்கள் ஆவதாலும் இது ஒரு தொடர் பிரச்சினையாகக் காணப்படுவதாலும், இக்குறைபாடு ஆரோக்கியமற்ற தலைமுறை உருவாக காரணமாக அமைவதாலும் இது தொடர்பான நடவடிக்கை எடுக்கவேண்டியது எல்லோரதும் தார்மீகபொறுப்பாகும்.

'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் முதற்கட்டமாக யாழ்.நகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் இளம் பெண்களின்போசாக்கு நிலையை மதிப்பீடு செய்வதுடன் குறைபாடு உடையவர்களுக்கான 6 மாத கால கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ள யாழ்.வணிகர் கழக அனுசரணையுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தீர்மானித்துள்ளது.

'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் நடத்த தீர்மானித்திருக்கும் நிகழ்ச்சித் திட்டம் யாழ்.மாவட்ட மக்களின் போசாக்கு மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்படும் செயற்றிட்டமாக அமைவதால் சகல வியாபார நிறுவன உரிமையாளர்களும் அவர்களின் வியாபார நிலையங்களில் சேவையாற்றும் இளம் பெண்களும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவரும் அதிகாரிகளுக்கு பூரண ஒத்துழைப்பையும் வழங்குமாறு யாழ்.வணிகர் கழகம் வியாபார நிலைய உரிமையாளர்களையும் ஊழியர்களையும் கேட்டுக் கொள்கிறது.- என்றுள்ளது. (1)

## கபிலநாத் படுகொலை; விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே 19

மாணவன் கபிலநாத் படுகொலை வழக்கின் சந்தேகநபர்களை தொடர்ந்து எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இவ்வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (1-207)

## சுகாதார மேம்பாடு; அதிபர்களுக்கு செயலமர்வு

பருத்தித்துறை,மே 19

யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கு பாடசாலை சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய கல்வி அமைச்சினால் அறிவூட்டல் செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு அடுத்த மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பாடசாலை சுகாதார மேம்பாடு 'ஏச்.ஐ.வி./எய்ட்ஸ் தடுப்புத்திட்டம்' என்னும் விடயம் தொடர்பாகவே இச்செயலமர்வு நடைபெறவுள்ளது. (1-190)

## தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி வருடப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகள் ஜூலை மாதம் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதால், மீள்பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்கள் அந்தத் திகதிக்கு முன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறு கல்லூரியின் பதில் அதிபர் எஸ்.துரைராஜா கேட்டுள்ளார்.

அத்தோடு மீள் மதிப்பீட்டு பெறுபேறுகளை பதிவாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் அவர் தெரிவித்தார். (1)

## தென்னிலங்கை வியாபாரிகள் வருகை நிறுத்தம்; வாழைக்குலைகளின் விலைகள் வீழ்ச்சி

கோப்பாய்,மே 19

நீர்வேலிச் சந்தையில் வாழைக் குலைகளின் கொள்வனவு விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது கதலி இனம் கிலோ ஒன்று 15 தொடக்கம் 20 ரூபா வரையும் இதரை 20 தொடக்கம் 30 ரூபா வரையும் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளையில்-

கறி வாழை கிலோ ஒன்று 10 ரூபா தொடக்கம் 15 ரூபா வரையும் கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கைப் பகுதிகளில் நிலவும் மோசமான காலநிலையினால் வாழைப்பழ நுகர்வு குறைவடைந்தமையும் மற்றும் தென்னிலங்கை வியாபாரிகளின் கொள்வனவு குறைவடைந்தமையும் இதற்கான காரணம் என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (1-72)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 6 | 20.05.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி | : சப்தமி |
| | மு.இ. 07.06 வரை |
| நட்சத்திரம் | : ஆயிலியம் |
| | மு.இ. 08.03 வரை |
| சுபநேரம் | : 07.22 - 08.52 |
| ராகுகாலம் | : 1.22 - 02.52 |

# வெசாக் வெளிச்சக் கூடுகளை அமைக்கும் பணியில் படையினர்

நாவற்குழி,மே 19

எதிர்வரும் 27ஆம் திகதி வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வெளிச்சக்கூடுகள், அலங்காரப்பந்தல்களை அமைக்கும் பணிகளில் படையினர், பொலிஸார் ஈடுபட ஆரம்பித்துள்ளதைக் காண முடிகிறது.

உள்ளூர் மக்களது ஒத்துழைப்பையும் இதற்குப் பெற்றுவருகின்றனர்.

வெளிச்சக்கூடுகள் கட்டுவதற்குரிய மூங்கில் தடிகள் போன்றவற்றைத் தென்பகுதியில் இருந்து முற்கூட்டியே எடுத்து வந்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து சுற்றுலாப் பயணிகளும் இம்முறை பெருமளவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதிகள், ஹோட்டல்களை முற்கூட்டியே பதிவுசெய்யும் வேலைகளும் நடைபெறுவதாக இவற்றின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிச்சக் கூடுகள் அமைப்பதில் தென்பகுதியில் உள்ளோரின் நிபுணத்துவ ஆற்றல்கள் வெசாக் பௌர்ணமி தினத்தில் அறியமுடிகிறது.(50-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**FACULTY OF MEDICINE**

**DATE OF COMMENCEMENT OF PARA CLINICAL LECTURES & CLINICAL APPOINTMENTS FOR 31[st] BATCH**

The Para Clinical Lectures and Clinical Appointments for the 31[st] (2008) batch of students will commence on 24[th] May 2010.

**Registrar,**
**2010.05.18**

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை மகேந்திரநாதன்

நவாலியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேந்திரநாதன் 15.05.2010 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் (சின்னையா)-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் அல்வீனம்மாவின் அன்புக் கணவரும் நிகிலா, ஷகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகனின் அன்பு மாமனாரும் பத்மாவதி, பத்மநாதன், பாலநாதன், உருக்குமணிதேவி, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (20.05.2010) வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் திருகோணமலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலுப்பிள்ளை பத்மநாதன்
(சகோதரன்)

நவாலி தெற்கு,
மானிப்பாய். (98520)

## திருமதி இரவீந்திரநாத் சிவனேஸ்வரி



சிறுப்பிட்டி வடக்கினைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்டவருமான திருமதி இரவீந்திரநாத் சிவனேஸ்வரி 15.05.2010 (சனிக்கிழமை) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோமசுந்தரம் இரவீந்திரநாத்தின் அன்பு மனைவியும் வேலுப்பிள்ளை ஸ்ரீபாலசரஸ்வதி (கனடா), கந்தையா வைத்தியநாதன் (கிராம அலுவலர், புத்தூர் கிழக்கு), கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா (கிராம அலுவலர், சிறுப்பிட்டி கிழக்கு), நமசிவாயம் தங்கேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை காலை கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.வைத்தியநாதன்
(கிராம அலுவலர், புத்தூர் கிழக்கு).

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
021 321 5877 (98526)

## இரத்தினம் தங்கராசா



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம், வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தங்கராசா நேற்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்மணியின் அன்புக் கணவரும் ராஜ்குமார், காலஞ்சென்ற சுரேதா மற்றும் டேவிட்குமார், சுரேஷ்குமார், விஜிதா, வனிதா, வினோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிறைஞ்சினி,தேவகி, டுஷ்யந்தன் ஆகியோரின் மாமனாரும் யதுராஜ், தனுப்பிரியா, அபிநயா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

வைரவர் கோயிலடி,
காங்கேசன்துறை வீதி, மல்லாகம். (98511)

## நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் 'சமபோசா' நிறுவனத்தின் அனுசரணையுடன்யாழ். மாவட்ட பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இச்சுற்றுப் போட்டிக்கான கலந்துரையாடலும் அட்டவணை தயாரித்தலும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளன என போட்டி இணைப்பாளர் பேர்ட்டி பெனிஸ்ரர் தெரிவித்தார். (1)

## கோப்பாய் உற்சவத்தை ஒட்டி சமய அறிவுப் போட்டி

வடகோவை ஸ்ரீ சித்திர வேலா யுத சுவாமி கோயில் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டியை நடத்தவுள்ளது.

சமய அறிவுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் ஆலயத்தின் நிர்வாக பணிமனையில் அல்லது ஞானபண்டித சைவ விருத்திச் சங்கத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

சமய அறிவுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் சரவண பவானந்தா வித்தியாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-72)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. கௌரவ
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்)



திரு. சில்வேஸ்திரி அலென்ரின்
(உதயன்)
(நாடாளுமன்ற உறுப்பினர்)




திரு. சந்திரகுமார் முருகேசு (அசோக்)
(நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்)

எமது ஊருக்கு அன்று தொடக்கம் இன்றுவரை அளப்பரிய சேவையினையும் நிதியுதவியினையும் தந்துதவிய பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

வைரவிழா நிர்வாகம்.
காந்தி சனசமூக நிலையம், அரியாலை.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி




## அமரர் ஆறுமுகம் தர்மராஜா

பாசத்தால் எமை ஊட்டி வளர்த்த அப்பாவே!
சோகத்தால் மூழ்கினோம் - கொடிய நோய்
உங்களைக் கொன்ற செய்திகேட்டு
ஆணி வேராய் எம்மைப் பேணி வளர்த்த அப்பாவே!
விழுதுகள் நாம் விம்முகின்றோம் - விழிகளில்
உங்கள் நினைவுகளோடு
முப்பத்தொரு நாள்கள் கழிந்தன இன்றோடு
உங்கள் நினைவுகளோ என்றும் எங்கள் நெஞ்சோடு

பண்ணாகம்,
சுழிபுரம். (98518)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரணசாதன அதிகாரப் பத்திர அலுவலரால் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தலின் படிவம்
## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்
## குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 529(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட இறந்தவரான ஆளின் மரணச் சொத்துத் தொடர்பில் விருப்பாவணத்தை எண்பிப்பதற்கான/ மரண சாதன அதிகாரப் பத்திரத்திற்கான/மரண சாதன நிர்வாகப் பத்திரத்தின் அளிப்புக்கான/ மரபுரிமையாண்மைச் சான்றிதழ்களின் வழங்குகைக்கான பின்வரும் விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஒரு விருப்பாவணம் எண்பிக்கப்பட்டதென வெளிப்படுத்தி அல்லது இதற்கான V ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட ஆள்களுக்கு மரண சாதன அதிகாரப் பத்திரத்தின் அல்லது விரும் பாவணமொன்று இணைக்கப்பட்டோ இணைக்கப்படாமலோ மரண சாதன நிர்வாகப் பத்திரத்தின் அளிப்பிற்கென மரபுரிமையாண்மை சான் றிதழ் ஒன்றின் வழங்கலுக்கென கட்டளையொன்று ஆக்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆள் எவரும் 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) அத்தகைய ஆட்சேபனையை எழுத்தில் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

அட்டவணை

| நிரை I | நிரை II | நிரை III | நிரை IV | நிரை V | நிரை VI |
|---|---|---|---|---|---|
| மாவட்ட நீதிமன்றம் பதிவு இலக்கம் | இறந்தவரின் பெயர் | இறந்தவர் விருப்பாவணம் விட்டுச் சென்றாரா | விண்ணப்பகாரரின் பெயரும், முகவரியும் | பயனாளிகளின் அல்லது மரபுரிமையாளர்களின் பெயர்களும் இறந்தவருக்கு அவர் கொண்ட உறவு முறையும் | சம்மதமளிக்கும் மரபுரிமையாளர்கள் |
| மல்லாகம் தத்துவம் 45/10 | இந்திரகுமார் பெண் பங்கயச் செல்வி | இல்லை | 1. குருநாதன் ஸ்ரீகணநாதன் 2. பெண் செல்வமலர் பிரான்பற்று வீதி, சங்கானை. | கந்தசாமி இந்திரகுமார் கணவன். | கந்தசாமி இந்திரகுமார் |

திகதி: 21.04.2010 (98519)

ஒப்பம்/மரண சாதன அதிகாரப்பத்திர அலுவலர்,
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்.கொழும்பு வான் சேவை**

யாழ். கொழும்பு AIRPORT மற்றும் விசேட வைபவங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
ஒருவருக்கான கட்டணம் 1000/= மட்டும்.
தொடர்பு: 0777199319, 0777199352, 0779770027

**மணமகன் தேவை**

யாழ்/இந்து கௌரவ குடும்பம் 26 வயது, அவிட்டம், 8 செவ்வாய், 27 பாவம், பொது நிறம், சட்டத்துறையில் உயர்பதவி வகிக்கும் பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கிறார்கள். (வெளிநாடு விரும்பத் தக்கது)
தொ.பே: 0775004869

**தொடர்புகொள்ளவும்**

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் 2009 இல் தரம் 5இல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களை 30.05.2010 இற்கு முன்னர் சந்திக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

திருமதி ஜெ.தனபாலசிங்கம்
அதிபர்.
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

## Siva Brothers

கொக்கோலா குளிர்பானப் பிரியர்களே நீங்கள் வாங்கும் ஒவ்வொரு போத்தல் மூடிகளிலும் 50/-, 100/-, 200/-, 500/-, 1000/- Reload உண்டு. அத்துடன் குளிர்பானம் இலவசம் என இருக்கும் மூடிகளுக்கு இலவச சமாகச் சோடா வழங்கப்படும். ஆகவே கொக்க கோலா கொம்பனி குளிர்பான வாடிக்கையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**Distributor சிவா பிறதர்ஸ்**

205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212225688


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 05 ★ 10 ★ 1932



உதிர்வு 20 ★ 04 ★ 2010

### அமரர் கனகசபாபதி சிவசுப்பிரமணியம்

கடந்த 20.04.2010 அன்று அமரத்துவம் அடைந்து எமது குடும்பத் தலைவர் அமரர் கனகசபாபதி சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும், தபால், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாய் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (20.05.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆஸ்பத்திரி முன்பாக,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(98386)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 ★ 10 ★ 1951



அனைவரும் நெகிழ 06 ★ 06 ★ 1989

### அமரர் மகாலிங்கம் வேதநாயகம்பிள்ளை

(லிகிதர் A.C.C.D Office - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் 21 சென்றதப்பா
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கிறோம்
ஈண்டு வருவீர் என்று எண்ணி இலவுகாத்த கிளியானோம்
இன்னல்கள் நிறைந்து இருண்டு போனதப்பா எம் வாழ்வு
நீண்ட பயணத்தை நிறுத்திவிட்டு வாரும் அப்பா
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகின்றோம்.

லண்டன்,
பிரான்ஸ்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(98050)

## பத்தாண்டு நினைவுத் துளிகள்...



திதி 19 ★ 05 ★ 2010



சின்னத்துரை கனகசபை (முன்னாள் இராணுவ அதிகாரி)

விசாலாட்சி சிதம்பரப்பிள்ளை (பெரியம்மா)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் தசாப்தமானாலும்-என்றும்
எம் உள்ளத்தில் சுடர்விடும் தீபங்கள்.

மனைவி (பரமேஸ்வரி), பிள்ளைகள். பரமேஸ்வரன் [பேரன்], மருமகன், பேரப்பிள்ளைகள்.

ஈஸ்வரி இல்லம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
கல்வயல், சாவகச்சேரி. (98398)

## அஞ்சலி

திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
வைகாசி விசாகப் பொங்கல்
நாயக வளந்தெடுத்தலை
165 ஆண்டுகளுக்கு முன்
ஆரம்பித்த திருநெல்வேலி
கிழக்கு
சமரபாகுதேவன் வளவு
'கல்வீட்டார்'
நாகப்பர் வைத்திலிங்கம்
அவர்களின் பீட்டனும்
நாயக வளந்தின்
6ஆம் உரிமைக்காரருமாயிருந்த

**வே.சின்னராசா சிவராசா**

அவர்களினதும் அவ்வழிப்
பீட்டனும்,
5ஆம் உரிமைக்காரருமாயிருந்த

**வே.கந்தையா சுப்பிரமணியம்**

அவர்களினதும் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்மன் திருவருளை
வேண்டுகின்றோம்.

காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்,
இரண்டாம் உரிமைக்காரர்.

(4/587810)


உங்கள் அழகிய இல்லங்களுக்குரிய பெயர், முகவரி, இலக்கங்களை சாஸ்திர முறைப்படி எச்சிங், எங்கிறேவிங், எம்போசிங், ஸ்கிறீன் முறைகளில் பிளாஸ்ரிக், பித்தளை, சில்வர் மாபிள்களில் நவீன முறையில் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்

**S.S.யசோதரன் ஆட்ஸ்**

381u, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020



## மாடி வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5 அறைகள், 2 வரவேற்பு மண்டபம், குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. குடும்ப அங்கத்தவர்கள் விரும்பத்தக்கது.

SRI LANKA BOOK DEPOT
234, K.K.S. Road,
Jaffna. T.P- 0212222573


## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நாய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை குருநாதர் சுவாமி கோயிலடி, ஆனைப்பந்தியிலும் யாழ். வீதியில் அமைந்துள்ள ஞானக் குழந்தை பாலர் பாடசாலை முன்பாகவும்-

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வடக்கு வீதியில் அமைந்துள்ள பெருமாள் கோயிலடியிலும், கன்னாதிட்டி காளி கோயிலடியிலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## 4ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு 25 ★ 01 ★ 1925



உதிர்வு 19 ★ 05 ★ 2006

### அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டு யோசப்

எம் குடும்பத்தின் திருவுருவாய்வாழ்ந்திட்ட ஒளி விளக்கே!
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறுமோ எம்துயரம்
ஐயா என்று நாம் அழைத்தால்
ஆம் என்று பதில்தர யாருண்டு அவனியதில்
அன்போடும், பண்போடும் எம்முடன் வாழ்ந்தவரே!
ஆயிரம் உறவுகள் வந்தாலும் ஐயா
உங்களுக்கு அது ஈடாகுமா?
அன்போடு எம்மை வாழவைத்த எம் இதயத் தெய்வமே
ஆண்டவனின் திருவடி சேர்ந்ததேனோ எம்மைவிட்டு
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் நாம் இங்கு
நீங்களே எம் ஐயாவாக வேண்டுமென்று வேண்டுகின்றோம்
என்றும் உங்கள் ஆன்மா பேரின்ப வீட்டில் இளைப்பாற
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம் நாம் இங்கு.

இல.25A,மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம். (98512)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




## STUDY IN
LONDON CYPRUS SINGAPORE

யாழ்ப்பாணத்தில் விசேட UKவிசா தொடர்பான கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும்



**22 மே 2010**
(சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இடம் :
வீரசிங்கம் மண்டபம் - கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
மாணவர்களின் UK விசா சம்மந்தமான சகல சந்தேகங்களுக்கும் விளக்கமளிப்பதுடன் மாணவர்களை நேர்முகத்தேர்வு செய்து விசாக்கள் உறுதிப்படுத்தப்படும்.

9 a.m to 12.30p.m. UK visa information seminar | 1.30p.m to 5p.m. student interview

HOTLINE
KASTHURI 0773640136
HAKEEM 0722476000
SUMEIRA 0773640130
ABDULLAH 0774074203

**MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)**
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721,
0114 335044
Web: www.millmba.com
E-mail: mbaslt@yahoo.com

Cyprus visa can be arrange within 2 week



# STUDY IN INDIA

## இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

Garden City College Affiliated to Bangalore University

SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Maths + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & Biology + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any TWO Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (Sic)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாங்கொக்கிலிருந்து வெளியேற ஆர்ப்பாட்டக்காரர்கள் மறுப்பு

பாங்காக், மே 19

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கிலிருந்து வெளியேற அரசு விதித்த காலக்கெடுவை போராட்டக்காரர்கள் நிராகரித்து விட்டனர்.

பாங்கொக்கில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முன்னாள் பிரதமர் தட்சிண் சினவத்ர ஆதரவாளர்கள் அனைவரும் திங்கட்கிழமை மதியம் 1.30 மணிக்குள் நகரைவிட்டு வெளியேறவேண்டும். இல்லையேல் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்று தாய்லாந்து அரசு எச்சரிக்கை விடுத்திருந்தது.

எனினும், அரசின் இந்த எச்சரிக்கையை நிராகரித்த போராட்டக்காரர்கள், முடிந்தால் எங்களை வெளியேற்றிப் பாருங்கள் என்று சவால்விடுத்துள்ளனர். அதேவேளை, நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்டால் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் அரசு எச்சரித்துள்ளது.

''அரசின் இந்த எச்சரிக்கைக்கு நாங்கள் பயப்படப் போவதில்லை'' என்றும் போராட்டக்காரர்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். இது அரசுக்குக் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து அரசு அதிதீவிரமாக ஆலோசித்து வருகிறது.

இதனிடையே, அரசுடன் சமரசப் பேச்சு நடத்த தாங்கள் தயாராகவுள்ளனர் என்றும், அந்த சமரசப் பேச்சுக்கு ஐ.நா. மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.



ஆனால், போராட்டக்காரர்களின் இந்த வேண்டுகோளை தாய்லாந்து அரசு ஏற்க வாய்ப்பில்லை என்றே அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் துப்பாக்கியால் சுடப்பட்ட மேஜர் ஜெனரலும், தட்சிண் சினவத்ரவின் ஆதரவாளருமான கட்டியா சவஸ்திபோல் திங்கட்கிழமை வைத்தியசாலையில் மரணமடைந்தார். இதனால் போராட்டக்காரர்கள் கொதித்தெழுந்துள்ளனர்.

இதையடுத்து பாங்கொக்கில் மேலும் பதற்றம் அதிகரித்துள்ளது. போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடலாம் என்று அரசு கருதுகிறது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகரின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

பாங்கொக் நகரில் சுமார் 5,000 இற்கு மேலான போராட்டக்காரர்கள் சாலைகளில் அமர்ந்து அரசுக்கு எதிராக எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். சிலநேரங்களில் இவர்கள் கடைகளை எரித்து வன்முறையில் ஈடுபடுவதால் மக்கள் அச்சமின்றி நடமாடத் தயங்குகின்றனர்.

போராட்டக்காரர்களின் இந்தச் செயலால் பாங்கொக் நகரில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளைகூட வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல மக்கள் பயப்படுகின்றனர்.

பிரதமர் அபிசித் வெஜ்ஜிவா தலைமையிலான அரசு, பதவி விலகாதவரை தாங்கள் பாங்கொக்கைவிட்டு வெளியேறப்போவதில்லை என்பதில் போராட்டக்காரர்கள் உறுதியாகவுள்ளனர்.

# ஆப்கான் மலையில் விமானம் மோதி விபத்து; 43 பயணிகள் மரணித்திருக்கலாம் என அச்சம்

## மீட்புப் பணியில் நேட்டோ படையும் பங்கு

காபூல், மே 19

ஆப்கானிஸ்தானில் விமானம் மலையில் மோதி நொறுங்கியது. இந்த விபத்தில், விமானத்தில் பயணம் செய்த 43 பயணிகளும் பலியாகியிருப்பர் என அஞ்சப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில், தனியாருக்குச் சொந்தமான 'பாமிர் ஏர்வேஸ்' என்ற நிறுவனத்தின் பயணிகள் விமானம் ஒன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வடக்கு பிராந்தியத்திலுள்ள குண்டுஸ் என்ற நகரத்திலிருந்து தலைநகர் காபூலுக்கு புறப்பட்டுச் சென்றது.

இவ்விமானத்தில் 35 ஆண் பயணிகள், 3 பெண் பயணிகள், விமானிகள் மற்றும் பணியாளர்கள் 5 பேர் ஆக மொத்தம் 43 பேர் இருந்தனர். 38 பயணிகளில் ஒரு பெண் உட்பட 6 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள்.

இந்துகுஷ் பிராந்தியத்தில் சலாங் மலைப் பிரதேசத்தில் சென்றுகொண்டிருந்தபோது அந்த விமானம் திடீரென்று காணாமல் போனது. தலைநகர் காபூலின் வடக்குப் பகுதியிலிருந்து 100 கி.மீற்றர் தொலைவுக்குப் பரவியுள்ள இந்த மலைப் பகுதி, 13 ஆயிரத்து 350 அடி உயரம் கொண்டதாகும்.

காணாமற் போன விமானம் இந்த மலைப்பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, மலையில் மோதி நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளான விடயம் பின்னர் தெரிய வந்தது. ஆனால், எந்த இடத்தில் விழுந்து நொறுங்கியது என்ற விவரம் உடனடியாக வெளியாக வில்லை.

''காபூலுக்கு 30 கி.மீற்றர் தொலைவில் விமானம் வந்தபோது அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மழை மேகம் கொண்ட மோசமான வானிலை காரணமாக விமானம் மலையில் மோதி நொறுங்கியிருக்கலாம்'' என ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் பாஷாரி தெரிவித்தார்.

''இந்த விபத்தில் விமானத்திலிருந்த 43 பேரும் பலியாகி இருக்கலாம். யாராவது உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு உண்டா என்று உடனடியாகத் தெரியவில்லை'' என்றும் அவர் கூறினார்.

''விபத்து நடந்த இடத்தை கண்டுபிடித்து, மீட்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு குழுவை ஆப்கானிஸ்தான் அரசு உடனடியாக அனுப்பி வைத்தது. அவர்களுக்கு உதவி செய்ய, தலீபான்களை எதிர்த்துப் போராட வந்துள்ள அமெரிக்கா தலைமையிலான ஐ.நா.சபையின் சர்வதேச (நேட்டோ) படைகளும் அனுப்பப் பட்டுள்ளன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அந்தப் படையின் ஆளில்லா விமானங்களும், ஆப்கானிஸ்தான் இராணுவத்தின் போர் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் விபத்து நடந்த இடத்தைக் கண்டுபிடித்து, மீட்புப் பணிகளை மேற்கொள்ள அனுப்பப் பட்டுள்ளன'' என்றும் பாஷாரி தெரிவித்தார்.

''எல்லாவற்றும் மேலாக போக்குவரத்து அமைச்சரே நேரடியாக மீட்புப் பணிகளை கண்காணிக்க விபத்து நடந்த இடத்துக்கு சென்றுள்ளார்'' என்றும் அவர் கூறினார்.

# தேடப்படுவோரின் பட்டியலில் ஒசாமாவுக்கு தொடர்ந்து முதலிடம்



உலக அளவில் தேடப்படுவோர் பட்டியலை 'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் தொடர்ந்து முதல் இடத்தில் இருப்பவர் பின்லேடன் தான். அவர் 2008 ஆம் ஆண்டிலிருந்து முதல் இடத்தில் இருந்து வருகிறார்.

அதற்கு அடுத்த இடத்தில் மெக்சிக்கோ போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவர் ஜோக்குயின் கஸ்மன் இருக்கிறார்.

3 ஆவது இடத்தை தாவூத் இப்ராஹிம் பிடித்திருக்கிறார். மும்பையைச் சேர்ந்த அவர் 1993 ஆம் ஆண்டு மும்பையில் தொடர் குண்டு வெடிப்புகளுக்குக் காரணமாக இருந்தவர்.

தாவூத் இப்ராஹிம் பாகிஸ்தானில் பதுங்கி இருக்கிறார். அவரை இந்தியா பல ஆண்டுகளாகத் தேடி வருகிறது. அவர் ஐயாயிரம் பேரைக்கொண்ட கும்பலின் தலைவராக செயற்பட்டுவருகிறார். இக்கும்பலில் உள்ள அனைவரும் பல்வேறு பாரதூரமான குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்களாவர்.



உலக அரங்கில்

# துருக்கி, பிரேஸிலுடன் ஈரான் உடன்படிக்கை

தெஹ்ரான், மே 19

அணுஆயுதம் தயாரிப்பதற்காகத்தான் யூரேனியத்தை ஈரான் செறிவூட்டுகிறது என்று அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் அச்சம் தெரிவித்தன. இதனால் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. இப்போதும் மேலும் அதிகளவில் பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா ஏற்பாடு செய்துவருகிறது.

இந்நிலையில் இந்தப் பொருளாதாரத் தடையைத் தவிர்ப்பதற்காக ஐ.நா. சபையின் ஆதரவுபெற்ற ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டுள்ளது.

இதன்படி குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை ஈரான், துருக்கி, பிரேஸில் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி உயர் அளவுக்கு செறிவூட்டி, எரிபொருள் கம்பிகளாக மாற்றி மீண்டும் ஈரான் திரும்பப் பெற்றுக்கொள்ளும். இந்த எரிபொருள் கம்பிகள் மருத்துவ ஆராய்ச்சிக்கான அணு உலைகளில் பயன்படுத்தப்படும்.

இந்த ஒப்பந்தத்தில் துருக்கி, பிரேஸில் ஆகிய நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் ஐ.நா.சபையின் அணு ஆயுதக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். அதன் ஒப்புதலைப் பெற்றபின்னர் ஈரானால் குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட யூரேனியத்தைத் துருக்கிக்கு ஒரு மாதகாலத்துக்குள் அனுப்பி வைக்கப்படும்.

அதற்குப் பதிலாக துருக்கியிலிருந்து 20 சதவீத உயர் ரக அளவில் செறிவூட்டப்பட்ட யூரேனியத்தை ஈரானுக்குத் துருக்கி அனுப்பிவைக்கும். இதன்மூலம் அணுஆயுதம் தயாரிப்பதற்காகத்தான் யூரேனியத்தை ஈரான் செறிவூட்டுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

உலக அமைதிக்குத் தலைவலியாக இருந்த ஈரான் அணுசக்திப் பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

# பாக். வீதியோரக் குண்டுவெடிப்பில் மூன்று பொலிஸார் உட்பட 11 பேர் பலி!



டேரா இஸ்மாயில்கான், மே 19

வடமேற்கு பாகிஸ்தானில் பொலிஸ் ரோந்து வாகனத்தை இலக்கு வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர் என அப்பகுதி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மொஹம்மத் அஸ்லம் தெரிவித்தார்.

டேரா இஸ்மாயில் நகரை நோக்கி சென்றுகொண்டிருந்த ரோந்து வாகனம் அண்மித்ததும், வீதியோரத்தில் தாங்கள் மறைத்து வைத்திருந்த குண்டை தீவிரவாதிகள் தன்னியக்கக் கருவி மூலம் வெடிக்க வைத்துள்ளனர் என்றும் அவர் விவரித்தார்.

இக்குண்டுவெடிப்பில் மூன்று பொலிஸாரும், எட்டு சிவிலியன்களும் பலியாகியுள்ளனர். பொலிஸாரில் ஒரு சிரேஷ்ட அதிகாரியும், அவரது மெய்ப்பாதுகாவலரும், சாரதியும் அடங்குவர். சிவிலியன்களில் இரு மாணவர்கள் பலியாகியுள்ளார்கள் என்றும் அவர் விவரித்தார்.

இதில் 15 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள். அவர்கள் ஏழு பேர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மொஹம்மத் அஸ்லாம் மேலும் தெரிவித்தார்.

பழங்குடி மக்கள் வசிக்கும் பாகிஸ்தானின் தென் வசிரிஸ்தான் பிராந்தியம் தலிபான்களின் கோட்டையாகத் திகழ்ந்தது. டேரா இஸ்மாயில் கான் உட்பட தென் வசிரிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராகக் கடந்த ஒக்டோபர் நடுப்பகுதியில் பாகிஸ்தான் இரா ணுவம் அதிரடி நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டது.

இந்த இராணுவ நடவடிக்கைகளின் போது, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் டேரா இஸ்மாயில் கானைவிட்டு பறந்து விட்டார்கள். அதேவேளை, அநேக தீவிரவாதிகளும் தப்பியோடிவிட்டார்கள். தப்பியோடிய தீவிரவாதிகள் தற்போது இப்பிராந்தியத்துக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
நல்லூர்.

(98513)



**மணமகன் தேவை**

மணமகள் விவரம்:1973,பூரம், செவ்வாய் 11இல், கிரகபாவம் 28 1/2,உயரம் 5'6'', வெள்ளை நிறம், மிக அழகிய தோற்றம்! பட்டதாரி ஆசிரியை, வாணிப சமூகம், நற்பண்புகள் கொண்ட இவருக்கு முற்றிலும் பொருத்தமான மணமகன் தேவை. பல சமூகங்களையும் சேர்ந்த தகுதிகள் மிக்க மணப் பெண்களுக்கும் மணமகன்கள் தேவை.

அருள்முருகன் திருமண சேவை,
இல03 யாழ்.வீதி, சிறாம்பியடிலேன், யாழ்ப்பாணம்.
T.P- 021 222 9334



**வேலைக்கு ஆள்கள் தேவை**

அப்பள வேலை செய்வதற்கு ஆண்/பெண் வேலையாள்கள் உடனடியாகத் தேவை. (ஆண்கள் 800/= நாளொன்றுக்கு, பெண்கள் 300/= நாளொன்றுக்கு) பழக விரும்புவோரும் சேரலாம்.

தொடர்பு: இ.மகேஸ்வரன் அப்பளக் கொம்பனி
சீனிப்புளியடி (ஆரம்ப பாடசாலைக்கருகில்)
K.K.S. வீதி, இணுவில். 077 1393670


## நாடாளுமன்ற அமர்வு இனி மாலை வேளையில்

அடுத்த மாதம் 22 ஆம் திகதி முதல் நாடாளுமன்ற அமர்வுகள் பிற்பகல் ஒரு மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறவுள்ளன.

நாடாளுமன்றத்தில் நேற்றுக்காலை கட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுவரை காலமும் நாடாளுமன்றம் காலை 9.30 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

## 1084 முதியோர் அடையாள அட்டைகள்

நவாலி, மே 19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இதுவரை ஆயிரத்து 84 முதியோர் அடையாள அட்டைகள் விநியோகிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஓ-100)


**லண்டனில் உயர் கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு**

லண்டனில் உயர் கல்வியுடன் கூடிய வேலை வாய்ப்பு July / Sep intake சேவைகள். A rate Colleges & Univercities உடனடி அனுமதி பெற்றுக் கொடுத்தல், விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல், ஆவணங்கள் தயார் செய்தல் Financial sponsor ship ஏற்பாடு செய்தல் மற்றும் இலவச வழிகாட்டல் Re Apply முதலியன.

தொடர்பு - 0113042949, 0779218444 (98381)



Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

தபால் மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010



**தேவை**

AAT,CBF,CIMA கற்கைகளுக்கு கற்பிக்கக்கூடிய B.Com./BBA பட்டதாரிகள் ஒரு கிழமைக்குள் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

வி.இல.4023,
மே/உதயன்
கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.



## நாம் இப்போது சுன்னாகத்தில்...
## We are now at Chunnakam

மங்களகரமான திறப்பு விழா
இன்று(19.05.2010) புதன்கிழமை
மு.ப. 10 மணிக்கு

Opening Ceremony on
19.05.2010 Wednesday
at 10 am

எமது சேவைகள்:
★ குத்தகை
★ வாடகைக் கொள்வனவு
★ கடன்
★ காணி மற்றும் நீண்டகால முதலீடுகள்

Our Services
★Leasing
★Advances
★Hire Purchase
★Real Estate and Other Investments

நேஷன் லங்கா பினான்ஸ் PLC
160 1/3, காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

Nation Lanka Finance PLC
160 1/3, K.K.S. Road,
Chunnakam

தொலைபேசி
T.P: 021 4920309

தொலைநகல்
Fax:021 4920313

முகாமையாளர்
Manager: 0773623525





## கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 755
சீட்டிழுப்பு திகதி 17.05.2010

எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 01 11 19 27

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 16,148,910.40 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | - |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 09 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 241 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 486 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 12150 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 6908 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 172712 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 27202 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,030,100.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,267,261.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 30 . 01 . 1931



விண்ணில் 25 . 05 . 2004

## திருமதி ஆறுமுகம் கனகம்மா

(இளைப்பாறிய ஆசிரியர், யா/கமலாம்பிகை வித்தியாசாலை, மீசாலை)
திதி: சஷ்டி (19.05.2010)

அன்பின் மொத்த உருவமே விண்ணுலகம் நீ
சேர்ந்து ஆறு ஆண்டுகளும் ஆனதம்மா
கண்ணுறங்கும் வேளையிலும் கனவிலும் உங்கள்
நினைவால் கலங்கித் தவிக்கின்றோம் எங்கள்
அன்புத் தாயே! எமக்காக இறைவன் திருவடியில்
பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

'ஜெயபதி',
...ம்பிள்ளை வீதி,
...ச்சேரி.

உங்கள் நினைவால்
என்றென்றும் வாழ்ந்திடும்:
குடும்பத்தினர்.

(98373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 125 முன்னாள் போராளிகள் உட்பட 495 பேர் பெற்றோரிடம் கையளிப்பு

புனர்வாழ்வு நிலையங்களில் தங்கவைக் கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக் கத்தின் முன்னாள் போராளிகள் 125 பேர் உட்பட மாணவர்கள், பொதுமக்கள் என 495 பேர் நேற்று அவர்களுடைய பெற்றோர்கள், உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இவர்க ளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்ப கல் 10 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக் னராஜா, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க, மன்னார் மாவட்ட அரச அதிபர் ரீ.நீக்கிலாப்பிள்ளை உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

மதத்தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம் பமான இந்த நிகழ்வில் வேம்படி மகளிர் கல் லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. புனர்வாழ்வளிக்கப்பட்டு இரத் மலானை இந்துக் கல்லூரியில் தற்போது கல்வி கற்று வரும் மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப் பட்டன. தொடர்ந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட 495 பேர் அவர்களின் பெற்றோர்கள், உறவினர்களி டம் சம்பிரதாய பூர்வமாகக் கைய ளிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் 198 பேரும் பல்கலைக்கழக மாணவர்கள் 72 பேரும், கனரக வாகனச் சாரதிப் பயிற்சி பெற்ற 100 பேரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 125 பேரும் நேற்று கையளிக்கப்பட்டனர். (50-9-16-224)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்களும் அவ்வளாகத்தில் உள்ள வேறு பாதையைப் பயன்படுத்தினர்.

நேற்றுக் காலை முதல் பிற்பகல் ஒரு மணிவரை பெய்த மழையால் தியவன்ன ஓயாவின் நீர்மட்டம் உயர்ந்து நாடாளுமன்ற வளாகம் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டது.

இதனால் நேற்று சபை நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை, அமைச்சர் டிலான் பெரேரா இந்த விடயத்தைப் பிரதி சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

மழை தொடர்ந்தால் நாடாளுமன்ற ஊழியர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவர். அதனால், நாடாளுமன்ற அமர்வைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்று கட்சித் தலைவர்கள் கூடி முடிவெடுக்கவேண்டும் என்று டிலான் பெரேரா கூறினார்.

இது கட்சித் தலைவர் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. சந்தர்ப்பத்தைப் பார்த்து முடிவெடுக்கலாம் என்று விமல் வீரவன்ஸ அப்போது கூறினார்.

அதனைத் தொடர்ந்து அரச தரப்பு எம்.பியான விக்டர் அன்ரனி உரையாற்றினார். அவரது உரையைத் தொடர்ந்து சபையை ஒத்திப்போடுவதற்காகப் பிரதி சபாநாயகர் சபையோரின் இணக்கத்தைக் கோரினார்.

அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தமது இணக்கத்தை வழங்கினார். இந்த மழை தொடர்ந்தால் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நாடாளுமன்ற ஊழியர்கள் பாதிக்கப்படுவர். அதனால் சபை நடவடிக்கையை இடைநடுவில் நிறுத்தி மறுநாள் 1.30மணிவரையும் சபையை ஒத்திவைப்போம் என்றார்.


விற்பனையாகிறது

தேசியக்கொடி சகல அளவுகளிலும் விற்பனையாகிறது.

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம். 222 9881 சாவகச்சேரி. 227 0003

சக்தி TV, Supar Star கலைஞர்களுடன் பிரண்ட்ஸ் இசைக்குழுவினர்

வசந்தம் TV, சக்தி TV புகழ் பிரண்ட்ஸ் இசைக்குழுவினர்

யாழ். நகரில்... திருவிழாக்கள் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளிற்கு உங்கள் முதல் தெரிவு

பிரண்ட்ஸ் இசைக்குழு

இல. 11, A.V.றோட், கொழும்புத்துறை.

தொடர்புகளிற்கு : 0776366038

Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy

(Centre for International language Studies)

No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்

GOV. Reg. No W/A 76795

T.P : 077 4842464, 021 3216928, 0779927117

SAKTHIMICRO SYSTEM

Kandy Road, Sankaththanai, Chavakachcheri. Hotline- 0776102609

புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICT-10, ICT-11, GIT, DTP, MS Office, Hardware Multi Media, Video Mixing, Advanced Maya, 3D Max.

மலிவு விற்பனை 19,20,21 வரை மட்டுமே

| | | | |
|---|---|---|---|
| Dual Core 2.7 GHz | 8850/= | LCD Screen cleaner | 650/= |
| Biostar G 31 | 5750/= | DVD Writter box | 3550/= |
| Intel DG 41 | 8550/= | Woofer 2.1 | 1950/= |
| Asus P5 | 5550/= | East UPS 650va | 4350/= |
| 1GB DDR2 RAM | 3200/= | Laptop Cooling Pad | 1550/= |
| Hard Disk 250GB | 5700/= | Power supply | 1650/= |
| Hard Disk 160GB | 5550/= | | |
| Keyboard,Speaker | 400/= | | |
| Optical Mouse | 350/= | | |
| Web camera | 1100/= | | |
| Headset (with mic) | 300/= | | |
| UPS Battery | 1400/= | | |
| LG LCD 19" | 16950/= | | |
| AOC LCD 15.6" | 12750/= | | |
| Acer LCD 18.5" | 16750/= | | |

Pentium iv கணனிகள் 19000/= இலிருந்து

10,000/= மேல் கணனி பாகங்கள் வேண்டினால் 650/=ரூபாய் Mouse free.

Internet- 50 video call - 120

நம்பிக்கை,தாமதமின்றிய 1-5 Years Warranty

theep@sakthizone.com, 0776102609, www.sakthizone.com


## நாடு திரும்பினார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானின் தெஹ்ரான் நகரில் நடைபெற்ற ஜி - 15 நாடுகளின் 14ஆவது உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி, அந்த உச்சிமாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று உரையாற்றும்போது, 15ஆவது உச்சி மாநாடு குறித்த தகவலையும் வழங்கினார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## திடீர் மழையினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யாழ். நகர்ப்பகுதியில் வைத்தியசாலைக்கான மின்விநியோகம் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டதுடன், ஏனைய பகுதிகளுக்கான மின் விநியோகம் இன்று காலையே சீர்செய்யப்படும் என சுன்னாகம் மின் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. மின் விநியோகம் தடைப்பட்டதால் மக்கள் பெரும் இடையூறுகளைச் சந்தித்துள்ளனர். (அ-10-29)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாகப் பயணிகள் விமான நிலையத்தைச் சென்றடைய முடியாத நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக சகல சர்வதேச விமானச் சேவைகளும் தாமதமாகியுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சீரற்ற காலநிலை தொடருமாம்

தற்போதைய சீரற்ற காலநிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் எனக் காலநிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இவ்வார இறுதியில் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பமாகலாம் என்றும் தெரிவித்துள்ள காலநிலை அவதான நிலையம் இடி, மின்னல், மண்சரிவு, கடும் காற்று போன்றவை காணப்படலாம் எனவும், மீனவர்கள் கடலுக்குச் செல்வது குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்றும் அறிவித்துள்ளது. இரத்தினபுரி, களுத்துறை, காலி மாவட்டங்களின் 18 உதவி அரச அதிபர் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் உள்ளது என இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

### திருகோணமலையில்

திருகோணமலை - மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ, மஹிலிவுல்வெவ, நொச்சிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக 200இற்கும் அதிகளவான வீடுகள் பாதிப்படைந்தன என்றும், 20 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்றும் தெரியவருகின்றது.

அத்தோடு குறித்த பிரதேசங்களில் மரங்கள் முறிவடைந்து மின்கம்பங்களில் வீழ்ந்தமையால் மின்சாரத் தடையும் ஏற்பட்டது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். இந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் வி.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். (அ-சி)

## புலிப்பிரமுகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே கல்கிசையில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் - இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (சி)

## மீள்குடியேற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர் புஹ்னே இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தவையாவன.

உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியில் பற்றாக்குறை காணப்படுகின்றது.

சர்வதேச சமூகம் விரைவில் நிதி வழங்காவிட்டால் ஜூன் மாதத்துக்குப் பின்னர் முக்கிய தேவைகளுக்கான நிதி எம்மிடம் இருக்காது.

மோதல்கள் காரணமாக 60 வீதமான வீடுகள் மோசமாகச் சேதமடைந்துள்ளன. இந்தப் பகுதி மக்களிடம் வாழ்வாதார வசதிகள் எவையுமில்லை. இதனைக் கருத்திற்கொள்ளும்போது நிலைமை எவ்வளவு மோசமானது என ஊகிக்கலாம்.

மீள்குடியேறும் மக்களுக்கு உதவுவது, கண்ணிவெடிகளை அகற்றுவது, மக்களின் வாழ்வாதாரத்தை மீள ஆரம்பிப்பதற்கு உதவுவது போன்ற நடவடிக்கைகளுக்காக ஐக்கிய நாடுகள் சபைக்கு இவ்வருடம் 33 கோடியே 70லட்சம் டொலர்கள் தேவைப்படுகின்றன.

இது தவிர உணவு, குடிதண்ணீர், சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டிய நிலையில் 80ஆயிரம் பேர் முகாம்களில் உள்ளனர்.

எனினும், சர்வதேச சமூகம் இதற்கென 24 வீதத்தையே வழங்கியுள்ளது.

இதனால் தற்போது முன்னெடுக்கப்படும் திட்டங்களை இடைநிறுத்தவேண்டிய அல்லது தொடர்ந்து நிறுத்தவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

வன்னிப் பகுதியில் மீள்குடியேறும் குடும்பங்களுக்காக யு.என்.எச்.சி.ஆர். தலா 200 டொலரை வழங்கி வந்தது. எனினும் நிதிப் பற்றாக்குறை காரணமாக இதனைக் கடந்த மார்ச் மாதத்துடன் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இருந்தும் ஐ.நாவின் விசேட நிதியைப் பயன்படுத்தி இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தனது அவசர நிதியத்திலிருந்து 1கோடி 40 லட்சம் டொலர்களைப் பெற்றே தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. அடுத்த இரண்டு மாதத்திற்குள் இந்த நிதி முடிவடைந்துவிடும். இதனால் மீள் குடியேறுபவர்களுக்கு எதிர்காலத்தில் நிதியுதவி கிடைக்காமல் போகலாம். இதேபோன்று செப்ரெம்பருக்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம்.

நிதிப் பற்றாக்குறை காரணமாக முகாம்களிலும் நிலைமை மோசமடையலாம் - என்றார். (அ)


M.A., M.Com, MBA, Msc., P.G.Diploma

மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்

* மேற்படி பல்கலைக்கழகத்தினால் 2010 ஆம் ஆண்டு மார்கழி மாத பரீட்சை எடுப்பவர்களுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* பதிவு திகதி 05.06.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
* பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு:- 1. M.A., M.Com, MBA, Msc., P.G.Diploma ஆகிய பிரிவுகளுக்கு மே மாதத்திற்கான பரீட்சைகள் 22.05.2010 தொடக்கம் ஆரம்பமாகின்றது.
2. பரீட்சைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திக்கான அனுமதிஅட்டைகளையும் நேர அட்டவணையையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

யாழ்.இணைப்பாளர். காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை) T.P. 222 8148, 222 3208

புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ் மண்ணில்.....

எமது 2 கிளை நிறுவனத்திற்கும்

ஆளணி தேவை

* கணனி இயக்குனர் பெண் 15,000/= (வேதனம்)
* புத்தகம் கட்டுனர் (வைன்டிங்) 12,000/= (வேதனம்)
* அச்சக வேலை பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 27.05.2010

விண்ணப்பங்கள் நேரில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்

இல 666, கே.கே.எஸ் வீதி (யாழ் இந்துக் கல்லூரி அருகாமை) யாழ்


## மரண அறிவித்தல்



### முத்துலிங்கம் ராஜ்குமார்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி,கொழும்பு)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாக வும், கொழும்பு-13இணை வதிவிடமாகவும் கொண்ட மு.ராஜ்குமார் (17.05.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம்-பவளம் தம்பதியரின் புத்திரனும் திருமதி ராஜலக்ஷ்மியின் (பேபி) அன்புக் கணவரும் ராஜ்ஹரன் (ரமேஷ்), ராஜ்பவன் (சுரேன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சுகன்யா ராஜ்பவனின் மாமனும், ரக்ஷன்யாவின் அப்பப்பாவும், இந்திரகுமார் (இந்திரன்), விஜயகுமார் (பாபு), ஸ்ரீகர்ணகுமார் (கண்ணன்),திருமதி து.சறோஜா, திருமதி ஆ.பவானி, திருமதி நா.ரஜனி,திருமதி ம.நந்தினி, திருமதி நி.சாந்தினி (பவி), காலஞ்சென்ற மகா லிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2010) புதன்கிழமை பி.ப. ஒருமணிக்கு பூநாறி வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பூநாறி வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில்.

தகவல்: ரமேஷ்,சுரேன்(மகன்மார்)

தொ.பே.0772261333,0772479436

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தியில் தாய்லாந்து வெற்றி காணமுடிந்ததன் இரகசியம்

*வளர்ச்சியடைந்த, வேகமாக வளர்ந்து வரும் நாடுகள் கடந்து வந்த பாதைகள் ஏனைய நாடுகளுக்குப் பாடங்களாக அமைகின்றன, அவர்கள் வளர்ந்த வழிமுறைகள், சந்தித்த சவால்கள், அடைந்த சாதனைகள் எமது எதிர்காலத்தை திட்டமிடப் பெரும் உதவியாக அமையும.*

*அதனடிப்படையில் கடந்த மார்ச் மாதம் "நல்லாட சி" என்ற தலைப்பில் ஓர் சர்வதேச பயிற்சிப்பட்டறையும், கல்விச் சுற்றுலாவும் வடமாகாண சுகாதார அமைச்சினால் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப் பயிற்சியில் வடமாகாண சபையின் உயரதிகாரிகளும், வடமாகாண சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளும், வடமாகாணத்தின் ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இப் பயிற்சியில் பங்கு பற்றிய அங்கத்தவாகளில் ஒருவர் என்ற ரீதியில் இந் நாடுகளில் படித்த பல பாடங்களையும், பெற்றுக் கொணட பல பயனுள்ள அனுபவங்களையும் இப் பயணக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.*

தாய்லாந்து

அறிமுகம்

| | | |
|---|---|---|
| சனத்தொகை | - | 62 மில்லியன்கள் |
| நிலப்பரப்பளவு | - | 517,000 சதுர கி.மீ |
| இனங்கள் | - | தாய் - 75%, சீனர் - 11%, மலே - 3.5% |
| மதங்கள் | - | பௌத்தம் 95%, இஸ்லாம் - 4% |
| தலைநகரம் | - | பாங்கொக் |
| நாணயம் | - | பாத் |

தாய்லாந்து, பாராளுமன்ற நடைமுறை கொண்ட ஓர் ஜனநாயக நாடு எனினும் இன்னும் மன்னர் பரம்பரை, அதிகாரங்கள் ஏதும் இல்லாவிடினும் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றனர். குறிப்பாகத் தற்போதுள்ள மன்னர் சிறந்த கல்விமானாகவும், நாட்டின வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவராகவும் இருப்பதால் அனைதது்த் தரப்பினராலும் மிக உயர்வாக மதிக்கப்படுகின்றார்.

தாய்லாந்து மக்கள் எப்போதும் புன்னகை பூத்தபடி அனைவரையும் அன்போடு அரவணைத்து வரவேற்கும் பண்புடையவர்கள். குறிப்பாகத் தமது நாட்டுக்கு விருந்தினராக வருபவர்களை மிகவும் அன்புடன் வரவேற்று பண்பாக நடாத்துகின்றனர்.

தாய்லாந்து நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது அங்கு காணப்படும் சிறந்த வீதி வலையமைப்பு (Road networks). இங்கு வீதி அபிவிருத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றனர். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இது மிகவும் அவசியமாகும்.

இங்கும் பொதுப்போக்குவரத்துச் (Public transport) சேவைகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர். பஸ்சேவை, நிலத்தடி ரயில் சேவை, (Undergound train) வான் ரயில், சேவை (Sky train) போன்ற சேவைகள் மிகச்சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தனிப்பட்ட வாகனங்களைப் பொதுமக்கள் பாவிப்பதைக் குறைக்க முடிந்துள்ளது.

இங்கு பொதுமக்களுக்கு அரச நிர்வாக சேவைகளை வழங்குவதற்கு ஒரே இடத்தில் பல சேவைகளை வழங்கக்கூடிய One stop services என்ற சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு ஒரே இடத்தில் பலவிதமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் இலகுவாக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன. அல்லது அவற்றைப் பூர்த்தி செய்ய சிரமப்படுபவர்களுக்கு உதவிசெய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சேவைகளைக் குறுகிய நேரத்தில் வழங்கக்கூடிய ஒழுங்குகள் காணப்படுகின்றன.

கிராமிய பொருளாதாரம்

தாய்லாந்தில் "One Village One Product" (ஒரு கிராமம், ஒரு உற்பத்திப்பொருள்) என்ற பிரபல்யமான திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது இதன்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் கிராமியக் கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிக்க அரசாங்கத்தால் பல உதவிகள் வழங் கப்படுகின்றன. முதலீட்டு உதவிகள், தொழில்நுட்ப வசதிகள், விசேட பயிற்சிகள், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி வசதிகள் போன்றன அரசினால் வழங்கப் படுகின்றன. இதன்மூலம் உற்பத்தியின் அளவும், தரமும் பன்மடங்கு அதிகரிக்கின்றன. பல கிராமங் களிலிருந்து உற்பத்திப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் கிராமங்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து வளர்ந்துவருகின்றன. நாட்டின் பொருளாதாரமும் வலுவடைந்து வருகின்றது. இத்திட்டம் கிராமிய உற்பத்திப்பொருள்களைச் சர்வதேச சந்தைக்குக் கொண்டு சென்றுள்ளது. இதன்மூலம் இலைமறைகாயாக உள்ள பல கிராமியக் கைத்தொழில்கள் வளம்பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் சில தத்துவங்களை எமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்த முடியும். எமது கிராமங்களில் காணப்படும் கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிக்க, விஸ்தரிக்க மூலதன உதவிகள் வழங்கப்பட வேண்டும். இக்கைத்தொழில்களை வினைத்திறன் மிக்க தாக்க நவீன தொழில்நுட்ப வசதிகளும், விசேட பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். மேலும் சந்தைப்படுத்தல், ஏற்றுமதி வசதிகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

அதேபோல எமது பிரதேசத்தில் காணப்படும் விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளின் உற்பத்தித்திறனை



பாங்கொக் நகரின் வீதிவலையமைப்பு

மேம்படுத்த நவீன தொழல்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அதன்மூலம் எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

சமூக வலுவூட்டல்

தாய்லாந்தில் சமூக வலுவூட்டலுக்கு மிகச்சிறந்த முன்னுதாரணமாக நாம் தரிசித்த ஒரு கிராமத்தின் கதையைக் குறிப்பிட வேண்டும். பாங்கொக் நகரில் நகரை அழகுபடுத்த இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்த பல கால்வாய்கள் உள்ளன. இதன் கரையோரமாக மிக ஏழ்மையான மக்கள் சேரிகளில் குடிசை வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். மழைக்காலங்களில் இக்கால்வாய்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிரிழபபுகளும், சொத்து இழப்புகளும் ஏற்படுவதும் குடிசைகளை இழந்து மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்வதும் வ்ழமை.

இதில் பாங்பூவா என்ற கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் தமது மக்களின் தலைவிதியை மாற்ற திடசங்கற்பம் பூண்டனர். அக்கிராமத்தை சேர்ந்த குடும்பத்தலைவர்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளர்கள். அவர்களது வருமானத்தின் பெரும்பகுதி மதுபாவனைக்கு சென்றதால் குடும்பங்கள் பெரும்பாலும் ஏழ்மை நிலையிலேயே வாழ்ந்தன.

எனினும் இக்குடும்பப் பெண்கள் அன்றாட வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிக்க ஆரம்பித்தனர். மகளிர் சேமிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கினர். இதன்மூலம் ஒருசில வருடங்களில் கணிசமான ஒரு தொகையைச் சேகரித்தனர். அதன் பின்னர் வெள்ளப்பெருக்குக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய இருமாடிகளைக்கொண்ட நிரந்தர வீட்டுத்தொகுதி ஒன்றைக் கட்டத்தீர்மானித்தனர். தாம் சேகரித்த பணத்துடன் வங்கி ஒன்றின் மூலம் மீதிப்பணத்தைக் கடனாகப் பெற்று இவ்வீட்டுத்திட்டத்தைக் கட்டி முடித்தனர்.

மேலும் தமது கிராமத்திற்காக இருமாடிகளைக் கொண்ட சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, நூலகம் என்பவற்றையும் அமைத்தனர். இன்று தாய்லாந்தில் ஏனைய கிராமங்களுக்கு இக்கிராமம் ஒரு முன் மாதிரியான கிராமமாகத் திகழ்கின்றது. ஒரு கால்வாய் கரையோர சேரிக் கிராமம் மகளிர சேமிபபு அமைப்பின் மூலம் ஒரு நவீன வீடமைபபுத் தொகுதியையே அமைத்துச் சாதனை புரிந்துள்ளது.



வைத்திய கலாநிதி
ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.

ஒரு சமூகம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருந்தாலும் வலுவான சமூக அமைப்புக்கள் உறுதியாக நின்று உழைத்தால் நிச்சயம் தமது சமூகத்தை மேம்படுத்த முடியும். அவர்களால் தனித்தனி மனிதர்களாகச் சாதிக்க முடியாத பல விடயங்களை அவர்கள் சமூக அமைப்பாக ஒன்றிணையும்போது சாதிக்க முடியும். இது எமது பிரதேச கிராமங்களுக்கும் பொருந்தும. எமது கிராமமட்ட சமூக அமைப்புகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றை வலுவூட்டி சிறு உதவிகள் வழங்குவதன்மூலம் எமது கிராமங்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

தலைமைத்துவம்

தாய்லாந்திலும் அதன் துரித வளர்ச்சிக்கு அதன் முனனாள் பிரதமர் தக்சின் சினவத்ராவும். ஏனைய தலைவர்களும் வழங்கிய சிறந்த தலைமைத்துவமும் ஓர் முக்கிய காரணம். மேலும் தாய்லாந்திலும் திட்டமிடலுக்கும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவதை கண்காணிப்பதற்கும் முக்கியத்தவம் அளிக்கப்படுகின்றது. இங்கு அமைக்கப்படும் கட்டடங்கள் யாவும் நவீன கட்டடக்கலையுடன் கண்ணைக்கவரும் விதத்தில் அமைக்கபட்டு வருகின்றன.

சிக்கனம்

நாம் தாய்லாந்திலுள்ள அலுவலகம் ஒன்றுக்குச் சென்றபோது மதிய போசன நேரம், உத்தியோகத்தர்கள் ஓய்வு அறையில் மதிய உணவு அருந்திக் கொண்டிருந்தனர். அந்தவேளையில் அலுவலகத்தில் சகல விளக்குகளும் மின்விசிறிகளும் நிறுத்தப்பட்டிருந்தன. இதன்மூலம் தேவையற்ற நேரங்களில் இவறறை நிறுத்தி மின்சாரத்தை சேமிக்கின்றனர். எமது நாட்டைவிட எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்ட அந்த நாட்டு உத்தியோகத்தர்களின் சிறந்த மனப்பாங்கை நாம் காணக்கூடியதாக இருந்தது. இதனை ஏன் எமது அலுவலகங்களில் நடைமுறைப்படுத்த முடியாது?. சிறிய சிறிய மனப்பாங்கு மாற்றத்தின் மூலம் பெரிய பொருளாதார நலன்களைப் பெறலாம்.

மக்களின் மனப்பாங்கு

**பயணக் கட்டுரை 4**

இம் மூன்று நாடுகளினதும் வெற்றிக்கு அடித்தளமாக நாம் கண்ட இன்னோர் முக்கிய காரணம் மக்களின் மனப்பாங்கு. "இது எனது நாடு, இதனை முனனேற்ற நான் உழைக்க வேண்டும்" என்ற உணர்வை நாம் அனைவரிடமும் கண்டோம். இது எனது அலுவலகம், இது எனது கிராமம், இது எனது மாவட்டம், தேசம் என்ற அந்தப் பொது உணர்வு அனைவருக்கும் வரவேண்டும். இது எனது நகரம். இதனை நான் அழகாகவும் துப்பரவாகவும் வைத்திருக்க வேண்டும். என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் வரவேண்டும்.



பாங்கொக் விமான நிலையம்...

பொதுச்சொத்துக்களை எமது சொந்த சொத்துக்கள் போல் பாதுகாக்கும் உணர்வு வளர வேணடும். பொது இடங்களில் மின்சாரத்தை, தண்ணீரைச் சிக்கனமாகப் பாவிக்கும் மனப்பக்குவம் வளரவேண்டும்.

கட்டடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் மட்டும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் போதுமானவையல்ல. ஒரு தேசத்தின் மேம்பாட்டிற்கு மக்களின் மனப்பாங்கில் மாற்றம் தேவை. மாற்றத்திற்கேற்ற மக்களின் மனப்பக்குவமும் வளரவேண்டும். இம்மூன்று நாடுகளிலும் மக்களின் மாற்றத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியுள்ளனர்.

எமது பிரதேசங்களில் பலவிதமான வளங்கள் உள்ளன. பலவிதமான தொழில்கள் உள்ளன. இவற்றை நாம் திட்டமிட்ட முறையில் நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் முன்நேற்றினால் எமது பிரதேசங்களைத துரிதமாக அபிவிருத்தி செய்ய முடிய்ம். எம்மிடம் போதியளவு மனிதவளம் உள்ளது. எமது மக்க்ளின் மனப்பாங்கில் மாற்றம் ஏற்படவேண்டும். உலகம் எங்கோ சென்று கொண்டு இருக்கின்றது. நாம் எவ்வளவோ பின்தங்கியிருக்கிறோம். உலகத்துடன் ஈடு கொடுக்கக்கூடியவாறு நாம் எமது நாட்டையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

நிறைவுரை

இப் பயிற்சிப்பட்டறையின் இணைப்பாளராகவும் முக்கிய வளவாளராகவும் விளங்கிய பேராசிரியர் டாக்டர் பெனம்தாய் அவர்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகத் தற்போது பணிபுரிகின்றார். இவர் 1980துகளில் 4 வருடங்கள் இலங்கையில் மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். எமது நாட்டை நன்கு அறிந்தவர். அக்காலப்பகுதியில் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்துசென்றவர். இங்கு பல நண்பர்களைக் கொண்டிருப்பவர். எமது பிரதேசத்தைப்பற்றியும், மக்களைப் பற்றியும் நன்மதிப்பு வைத்திருப்பவர். அவர் கூறிய கருத்துக்களுடன் இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

"உங்கள் பிரதேச மக்கள், குறிப்பாக யாழ்ப்பாண மக்கள படித்தவர்கள். திறமைசாலிகள், கடும் உழைப்பாளிகள். உங்களிடம் எத்தனையோ வளஙகள் உள்ளன. நங்கள் மனது வைத்தால் உங்கள் பிரதேசங்களைக் குறுகிய காலத்தில் துரிதமாக அபிவிருத்தி செய்யமுடியும். அது உங்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. ★(முற்றும)

## யாழ்ப்பாண மக்கள் குறித்த பேராசிரியர் பெனம்தாயின் கணிப்பை யதார்த்தபூர்வமாக்க நாம் உழைக்கப் போவது எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Siva Brothers

கொக்கோலா குளிர்பானப் பிரியர்களே நீங்கள் வாங்கும் ஒவ்வொரு போத்தல் மூடிகளிலும் 50/-, 100/-, 200/-, 500/-, 1000/- - Reload உண்டு. அத்துடன் குளிர்பானம் இலவசம் என இருக்கும் மூடிகளுக்கு இலவச சமாகச் சோடா வழங்கப்படும். ஆகவே கொக்க கோலா கொம்பனி குளிர்பான வாடிக்கையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**Distributor சிவா பிறதர்ஸ்**

205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212225688


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 05 ★ 10 ★ 1932

உதிர்வு 20 ★ 04 ★ 2010



### அமரர் கனகசபாபதி சிவசுப்பிரமணியம்

கடந்த 20.04.2010 அன்று அமரத்துவம் அடைந்து எமது குடும்பத் தலைவர் அமரர் கனகசபாபதி சிவசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும், தபால், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாய் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (20.05.2010) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆஸ்பத்திரி முன்பாக,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(98386)

## 21ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மகிழ 24 ★ 10 ★ 1951

அனைவரும் நெகிழ 06 ★ 06 ★ 1989



### அமரர் மகாலிங்கம் வேதநாயகம்பிள்ளை

(லிகிதர் A.C.C.D Office - மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் 21 சென்றதப்பா
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கிறோம்
ஈண்டு வருவீர் என்று எண்ணி இலவுகாத்த கிளியானோம்
இன்னல்கள் நிறைந்து இருண்டு போனதப்பா எம் வாழ்வு
நீண்ட பயணத்தை நிறுத்திவிட்டு வாரும் அப்பா
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகின்றோம்.

லண்டன்,
பிரான்ஸ். (98050)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பத்தாண்டு நினைவுத் துளிகள்...



திதி 19 ★ 05 ★ 2010



**சின்னத்துரை கனகசபை** (முன்னாள் இராணுவ அதிகாரி)

**விசாலாட்சி சிதம்பரப்பிள்ளை** (பெரியம்மா)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் தசாப்தமானாலும்-என்றும்
எம் உள்ளத்தில் சுடர்விடும் தீபங்கள்.

மனைவி (பரமேஸ்வரி), பிள்ளைகள். பரமேஸ்வரன் (பேரன்), மருமகன், பூட்டப்பிள்ளைகள்.
ஈஸ்வரி இல்லம், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. கல்வயல், சாவகச்சேரி.

## அஞ்சலி

திருநெல்வேலி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
வைகாசி விசாகப் பொங்கல்
நாயக வளந்தெடுத்தலை
165 ஆண்டுகளுக்கு முன்
ஆரம்பித்த திருநெல்வேலி
கிழக்கு
சமரபாகுதேவன் வளவு
'கல்விட்டார்'
நாகப்பர் வைத்திலிங்கம்
அவர்களின் பீட்டனும்
நாயக வளந்தின்
6ஆம் உரிமைக்காரருமாயிருந்த

**வே.சின்னராசா சிவராசா**

அவர்களினதும் அவ்வழிப்
பீட்டனும்,
5ஆம் உரிமைக்காரருமாயிருந்த

**வே.கந்தையா சுப்பிரமணியம்**

அவர்களினதும் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்மன் திருவருளை
வேண்டுகின்றோம்.

காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்,
இரண்டாம் உரிமைக்காரர்.

(அ/567810)


உங்கள் அழகிய இல்லங்களுக்குரிய பெயர், முகவரி, இலக்கங்களை சாஸ்திர முறைப்படி எச்சிங், எங்கிறேவிங், எம்போசிங், ஸ்கிறீன் முறைகளில் பிளாஸ்ரிக், பித்தளை, சில்வர் மாபிள்களில் நவீன முறையில் வடிவமைத்துப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்

**S.S.யசோதரன் ஆட்ஸ்**

381u, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0217903020



## மாடி வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5 அறைகள், 2 வரவேற்பு மண்டபம், குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. குடும்ப அங்கத்தவர்கள் விரும்பத்தக்கது.

SRI LANKA BOOK DEPOT
234, K.K.S. Road,
Jaffna. T.P- 0212222573


## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே 19

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பசார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நாய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை குருநாதர் சுவாமி கோயிலடி, ஆனைப்பந்தியிலும் யாழ். வீதியில் அமைந்துள்ள ஞானக் குழந்தை பாலர் பாடசாலை முன்பாகவும்-

நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை வடக்கு வீதியில் அமைந்துள்ள பெருமாள் கோயிலடியிலும், கன்னாதிட்டி காளி கோயிலடியிலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## 4ஆம் வருட நினைவஞ்சலி

மலர்வு 25 ★ 01 ★ 1925

உதிர்வு 19 ★ 05 ★ 2006



### அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டு யோசப்

எம் குடும்பத்தின் திருவுருவாய்வாழ்ந்திட்ட ஒளி விளக்கே!
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறுமோ எம்துயரம்
ஐயா என்று நாம் அழைத்தால்
ஆம் என்று பதில்தர யாருண்டு அவனியதில்
அன்போடும், பண்போடும் எம்முடன் வாழ்ந்தவரே!
ஆயிரம் உறவுகள் வந்தாலும் ஐயா
உங்களுக்கு அது ஈடாகுமா?
அன்போடு எம்மை வாழவைத்த எம் இதயத் தெய்வமே
ஆண்டவனின் திருவடி சேர்ந்ததேனோ எம்மைவிட்டு
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் நாம் இங்கு
நீங்களே எம் ஐயாவாக வேண்டுமென்று வேண்டுகின்றோம்
என்றும் உங்கள் ஆன்மா பேரின்ப வீட்டில் இளைப்பாற
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம் நாம் இங்கு.

இல.25A,மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம். (93512)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




## STUDY IN
LONDON CYPRUS SINGAPORE

யாழ்ப்பாணத்தில் விசேட UK விசா தொடர்பான கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும்



**22 மே 2010**
(சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இடம் :
வீரசிங்கம் மண்டபம் - கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
மாணவர்களின் UK விசா சம்மந்தமான சகல சந்தேகங்களுக்கும் விளக்கமளிப்பதுடன் மாணவர்களை நேர்முகத்தேர்வு செய்து விசாக்கள் உறுதிப்படுத்தப்படும்.

9 a.m to 12.30p.m. UK visa information seminar | 1.30p.m to 5p.m. student interview

HOTLINE
KASTHURI 0773640136
HAKEEM 0722476000
SUMEIRA 0773640130
ABDULLAH 0774074203

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721,
0114 335044
Web: www.millmba.com
E-mail: mbaslt@yahoo.com

Cyprus visa can be arrange within 2 week



## STUDY IN INDIA

**இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு**

Garden City College Affiliated to Bangalore University

SSM College of Engineering affiliated to Anna Engineering University

- B.E. Information Technology,
- B.E. Computer Science,
- B.E. Electronics and Communication,
- B.E. Mechanical Engineering,

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & **Maths** + O/L Pass In English

- B.Sc. (Genetics),
- B.Sc. (Biotechnology),
- B.Sc. (Microbiology),
- B.Sc. Physiotherapy
- B.Sc. Nursing

Entry Requirements : :A/L Passes in Chemistry, Physics & **Biology** + O/L Pass In English

- B.Sc. (Fashion & Apparel Design),
- B.A. (Journalism),
- BHM. (Bachelor of Hotel Management),
- BCA. (Bachelor of Computer Applicants),
- BBM. / BBA
- B.Com (Computers)

Entry Requirements : :A/L Passes in any **TWO** Subjects + O/L Pass In English

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (Sic)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒளிந்திருக்கும் உண்மைகள்!

ஓர் ஊரிலே ஒரு சிற்பி இருந்தார்.

ரொம்பவும் திறமையுள்ள சிற்பி அவர்.

எங்கேயாவது ஒரு கல்லுக் கிடந்தால் போதும் அதை எடுத்துக்கிட்டு வருவார். அழகா ஒரு சிற்பத்தைச் செஞ்சிடுவார்.

''எப்படிங்க ... அவ்வளவு மோசமான கல்லூலே இருந்து எவ்வளவு அழகாக ஒரு சிற்பத்தை உங்களால் முடிஞ்சுது ?. - ன்னு கேட்டா...

'' இந்தச் சிற்பம் ஏற்கனவே அந்தக் கல்லுக்குள்ளே இருந்துதுங்க... இதைச் சுற்றியிருந்த வேண்டாத பகுதிகளையெல்லாம் உளியாலே கொத்தி எடுத்திட்டேன்.. அவ்வளவு தான்... உள்ளே இருந்த இது வெளியிலே வந்துட்டுது !'' - ம்பார்.

அந்த அளவுக்கு திறமைசாலி.

ஒரு சின்ன பாறை அல்லது கருங்கல்லைப் பார்த்தார் - ன்னா ... அந்தக் கல்லின் அமைப்பை கவனிச்சிட்டு,

''இதுக்குள்ளே ஒரு விரன் ஒளிஞ்சிருக்கான்''- ம்பார்.

''இந்தக் கல்லுக்குள்ளே ஒரு துறவி உக்கார்ந்திருக்கார்'' - ம்பார்.

''இந்தக் கல்லுக்குள்ளே ஒரு நடனமங்கை நடனம் ஆடிக்கிட்டிருக்கா'' - ம்பார்.



அந்தக் கல்லைக் கொண்டுகிட்டு வருவார்.

அவர் சொன்ன மாதிரியே உள்ளேயிருக்கிற அவங்களை வெளியிலே கொண்டுகிட்டு வந்துடுவார்.

இந்தச் சிற்பிக்கு ரொம்ப நாளா மனசுக்குள்ளே ஒரு ஆசை.

உண்மை - தூய்மை - இதுக்கு உதாரணமா இருக்கக் கூடிய புத்தர் சிலையை வடிக்கணும்ங்கற ஆசை. ஆனா அந்த ஆசை நிறைவேறாமலே இருந்துது.

அதுக்கு என்ன காரணம்ன்னா அதுக்குத் தகுந்த மாதிரி ஒரு கல்லு கிடைக்கலே.

ரொம்ப காலமா தேடி அலைஞ்சார்.

கண்ணிலே படற கல்லையெல்லாம் உத்துப் பார்ப்பார். உள்ளே புத்தர் இருக்காரா - ன்னு கவனிப்பார்...

இருக்கிற மாதிரி எதுவும் தெரியலே.

சரி... இதுக்கு என்ன செய்யலாம் - ன்னு யோசிச்சார்.

நேரா ஒரு புத்த மடாலயத்துக்குப் போனார். அங்கே இருந்த ஒரு புத்த துறவியை சந்தித்தார். அவருகிட்டே விசாரிச்சார்;

''சுவாமி... புத்தரின் தூய்மை ஒளிஞ்சிருக்கிற அந்தக் கல் எங்கே கிடைக்கும்?'' - ன்னு கேட்டார்.

''அந்தக் கல் இருக்கிற இடம் எதுன்னு இன்னமும் உங்களுக்குத் தெரியலையா?'' - ன்னு கேட்டார் துறவி.

''இல்லே!'' - ன்னார் இவர்.

''சரி ... கவலைப்படாதீங்க ... என் கூட வாங்க ...காட்டறேன்...!'' - னு அழைச்சிட்டுப் போனார்.

அந்த மடாலயத்தின் பின்பக்கம் போனாங்க ரெண்டுபேரும்!

அங்கே ஒரு கிணறு இருந்தது.

''எட்டிப் பாருங்க!'' - ன்னார் துறவி.

எட்டிப் பார்த்தார் சிற்பி.

தன்னோட உருவம்தான் அந்தத் தண்ணீரிலே தெரிஞ்சிது.

இப்ப அந்த புத்த ஞானி சொன்னார்;

''துறவியாரே ... புத்தரை நாமதான் ஒளிச்சு வச்சிருக்கிறோம். நமக்குள்ளேதான் அவர் மறைஞ்சு இருக்கிறார்.அவரை அடையாளம் தெரியாதபடி மூடியிருக்கிறது எது தெரியுமா?

நம்மகிட்டே இருக்கிற கோபம், போலித்தனம்,பதற்றம், ஆசை... - இதெல்லாம் தான்.

அறிவு என்கிற உளியாலே அதையெல்லாம் செதுக்கி எடுத்திட்டா... அந்த அழகான புத்தர் வெளியிலே வருவார்!'' - அப்படின்னார்.

ஒரு அப்பா .... தன் பிள்ளைக்குப் புத்தி சொன்னார்.

''இதோ பாருப்பா... மனசுதான் கல்லு. அறிவுதான் உளி.

உன்னுடைய 'மனசு' ங்குற கல்லை ... 'அறிவு' ங்கிற உளியாலே செதுக்கி அழகான மனிதனா நீ வெளியிலே வரணும்!'' - ன்னார்.

''அதுக்காகத்தாம்ப்பா தேடிக்கிட்டிருக்கிறேன்! '' னான் அவன்.

'' 'மனசு' ங்கற கல்லைத் தேடிக்கிட்டிருக்கியா?'' ன்னார்.

''இல்லேப்பா ... அறிவுங்கிற உளி எங்கேயிருக்குன்னு தெரியலே... அதைத்தான் தேடிக்கிட்டிருக்கேன்...!'' அப்படின்னான்.

*நன்றி: தகவல் களஞ்சியம்*

# இறைவனால் கூட முடியாது



வானொலியைக் கண்டுபிடித்ததற்காக விஞ்ஞானி மார்க்கோனிக்குப்பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அவ்வூரின் தொழிலதிபர்களும், அறிஞர்களும் மார்க்கோனியைப் பலவாறாகப் புகழ்ந்தார்கள். மார்க்கோனி மேடையில் அமர்ந்திருந்த பெண்மணி ஒருத்தி சளசளவென்று பேசிக் கொண்டிருந்தார். அவளது பேச்சு மார்கோனிக்கு எரிச்சலைத் தந்தது.

மார்க்கோனியை ரசிக்கவிடாமல் அந்தப் பெண் தன் பேச்சைத் தொடர்ந்தாள்.

''நீங்கள் கடவுளையே மிஞ்சிவிட்ட மாபெரும் விஞ்ஞானி. உலகின் எந்த மூலையிலும் நடக்கும் பேச்சைக்கூட இந்தச் சிறிய பெட்டிக்குள் அடக்கிவிட்டீர்கள்''

மார்க்கோனி, பெண்ணே....நீ கூறுவது உண்மைதான். நான் கண்டுபிடித்த இந்த வானொலியில் பேச்சை எப்பொழுது நினைத்தாலும் உடனே நிறுத்திவிடலாம். ஆனால் பெண்களின் பேச்சை, அந்த இறைவன் நினைத்தால் கூட நிறுத்தவே முடியாது!'' என்று கூற அந்தப் பெண் 'கப்சிப்'.

*தகவல்- அன்புமதி*

# இப்படியும் நடக்கலாம்



நகரவாசி ஒருவன் நள்ளிரவு பசியெடுக்கும் போது நாய்களுக்கான பிஸ்கட்டுக்களைக் கடித்தான். அவனுக்கு அவை மிகவும் பிடித்துவிட்டன.தன் மனைவியிடம் மளிகைக் கடையில் அவற்றை அதிகமாக வாங்கி வைக்கும்படி வற்புறுத்தினான். அவள் கேட்ட எண்ணிக்கையைப் பார்த்து மலைத்த மளிகைக் கடைக்காரர், '' உங்களுடைய சின்ன நாய்க்கு எதற்கு இவ்வளவு பிஸ்கட் ?'' என்று கேட்டார்.

'' இவை என் கணவனுக்கு'' என்றாள் அவள்.

'' இவை நாய்களுக்காகவே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டவை இவற்றை உண்டால் அவை உன் கணவரைக் கொன்றுவிடும்.''


ஆறுமாதம் கழித்து, மளிகைக் கடைக்காரரிடம் தன் கணவர் இறந்த விடயத்தை அந்தப் பெண் சொன்னாள்.

'' நான்தான் அந்த பிஸ்கட்டுகள் கொன்றுவிடும் என்று எச்சரித்தேனே?''

'' அவர் பிஸ்கட்டுகளால் சாகவில்லை.ஓடி ஓடி கார்களைத் துரத்தும் போது, அடிபட்டு இறந்துவிட்டார்'' என்றாள் அவள் சாவகாசமாக.

*இறையன்பு சொற்பொழிவிலிருந்து*

# அறிவாளியை ஏமாற்ற இயலாது



கார்லஸ் டார்வின், பரிணாமக் கோட்பாடு தத்துவத்தை விளக்கி புகழ்பெற்ற விஞ்ஞானி குரங்கிலிருந்து தோன்றியவன் மனிதன் என்ற உண்மை கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியது.

அக்காலத்து மக்கள் நம் மூதாதையரை இவர் குரங்கு என்று சொல்கிறாரே என்று அவர்மீது கோபம் கொண்டிருந்தார்கள்.

எனவே சில குறும்புக்கார சிறுவர்கள் நீல வண்டு ஒன்றினைப் பிடித்து அதன் இறக்கைகளை ஒடித்துவிட்டு அதற்குப் பதிலாக வண்ணத்துப் பூச்சியின் இறக்கைகளையும் வேறு சில பூச்சிகளின் உறுப்புகளையும் ஒடித்து ஒட்டி டார்வினிடம் கொண்டு வந்தார்கள்.

''ஐயா இதோ இது ஒரு புதுவிதமான பூச்சி. இதை இதற்கு முன்பு நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். இது என்ன பூச்சி என்று கண்டுபிடித்துக் கூறுங்கள் பார்க்கலாம்.'' என்றார்கள்.

டார்வின் அப்பூச்சியை வாங்கிப் பார்த்தார்.

''இதை நீங்கள் கொல்வதற்கு முன்னால் இது நன்றாக ரீங்காரம் செய்ததா-'' என்று கேட்டார்.

''ஆமாம் என்றார்கள் சிறுவர்கள்

''சபாஷ்! இதுதான் அசல் ஹம்பக்'' என்றார்.

''ஹம் என்றால் ஆங்கிலத்தில் ரீங்காரம் என்றும் பக் என்றால் பூச்சி என்றும் பொருளுண்டு. அதையே ஹம்பக் என்று சேர்த்து ஒரே வார்த்தையாகச் சொன்னால் முழுப் புரட்டு என்று அர்த்தமுண்டு'' டார்வினின் அதிரடியான பதிலைக் கேட்டு சிறுவர்களின் முகத்தில் அசடு வழிந்தது.

*சொற்பொழிவில் கேட்டவர்: காந்திமதி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஒகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.

# பௌதிகவியல்: பொறியியல்


73. படத்தில் காட்டப்பட்ட $\vec{PQ}, \vec{QR}, \vec{SR}, \vec{TS}, \vec{TP}$ ஆகிய 5 காவிகளினதும் கூட்டுத்தொகை,
1) பூச்சியம்.
2) $\vec{TS}$ 3) $2\vec{TS}$
4) $\vec{TR}$ 5) $2\vec{TR}$





74. இரு இழைகளால் W நிறையுள்ள ஒரு பொருள் தாங்கப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது. இழையில் உள்ள இழைகள் $T_1, T_2$ ஆகும். பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. $T_1 + T_2 > W$
B. $T_1^2 + T_2^2 = W^2$
C. $T_1 > T_2$
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும்.
2) A, B மட்டும்.
3) A, C மட்டும்.
4) B, C மட்டும்.
5) A,B,C எல்லாம்.





75. ஒவ்வொன்றும் 1kg திணிவுடைய $S_1S_2$ என்னும் இரு விற்றராசுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல் ஒன்றாக இணைக்கப்பட்டு கீழ் நுனியில் 4kg திணிவுடைய ஒரு குற்றி இணைக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றுள் எது சரியானது?
1) தராசு $S_1$ 0 ஐ வாசிக்காது, தராசு $S_2$ ஆனது 4kg ஐ வாசிக்கும்.
2) தராசு $S_1, S_2$ இரண்டும் 4kg ஐ வாசிக்கும்.
3) தராசு $S_1, S_2$ இரண்டும் 5kg ஐ வாசிக்கும்.
4) தராசு $S_1$ ஆனது 6kg ஐ வாசிக்க $S_2$ ஆனது 5kg ஐ வாசிக்கும்.
5) தராசு ஆனது $S_1$, 5kg ஐ வாசிக்க $S_2$ ஆனது 4kg ஐ வாசிக்கும்.





76. இலேசான இழைகளால் ஒரு நிறை W தொங்கவிடப் பட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. XY என்னும் இழையிலுள்ள இழுவை,
1) W tan 30°
2) W Cos 60°
3) W tan 30°
4) W tan 60°
5) W Sin 60°





77. W நிறையுடைய AB என்னும் சீரான கோல் ஒன்று ஒப்பமான வளையம் ஒன்றினூடு செல்லும் இலேசான நீளா இழையினால் தொங்கவிடப்பட்டுள்ளது. இழையின் இரு முனைகளும் கோலின் இரு முனைகளுக்கும் இணைக்கப்பட்டுள்ளன. கோலின் நுனியில் ஒரு நிறை W தொங்கவிடப்பட்டுள்ளது. இந்நிலைமையைச் சரியாக வகை குறிக்கும் படம் (கோலின் நடுப் புள்ளி C ஆகும்.)





78. m திணிவுடைய பொருள் ஒன்று கிடையுடன் θ சாய்ந்துள்ள ஒப்பமான சாய்தளம் ஒன்றில் வைக்கப்பட்டு F என்னும் கிடைவிசையினால் நிலையாகப் பிடிக்கப்பட்டுள்ளது. அப்பொருளின் மீது தாக்கும் மறுதாக்கம்,
1) $F + mg\tan\theta$
2) $F\sin\theta + mg\cos\theta$
3) $F\sin\theta - mg\cos\theta$
4) $F\sin\theta + mg\sin\theta$
5) FCoθs - mgSinθ




79. மத்தியில் சுழலையிடப்பட்ட சீரான வளை ஒன்றைப் படம் காட்டுகிறது. அதில் இரு சுமைகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. தொகுதியைச் சமப்படுத்த மூன்றாவது சுமை ஒன்று தொகுதிக்கு இணைக்கப்படுகிறது. அச்சுமையினது திணிவும் மையத்திலிருந்து அதன் தூரமும்,
1) 1kg, 10cm
2) 1kg, 50cm
3) 2kg, 10m
4) 2kg, 30cm
5) 3kg, 10cm




80. ஒரு மீனும் 30N நிறையும் ஒரு சீரான வளையிலிருந்து தொங்கவிடப்பட்டிருப்பதைப் படம்காட்டுகிறது. வளை அதன் நடுப்புள்ளியில் சுழலையிடப்பட்டுள்ளது. மீனின் நிறை,
1) 15N
2) 20N
3) 30N
4) 40N 5) 50N





81. 8N, 6N ஆகிய விசைகளின் விளையுளாக இருக்க முடியாதது?

## SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS


1) 2N 2) 6N 3) 8N
4) 10N 5) 16N

82. சமனில்லாப் புயங்களையுடைய தராசு ஒன்று பொருளொன்றின் திணிவைத் துணியப் பயன்படுத்தப்பட்டது. ஒரு தட்டில் நிறுக்கப்பட்டபோது அது 900g தோற்ற நிறையைக் கொடுத்தது. அடுத்த தட்டில் வைத்து நிறுக்கப்பட்டபோது அது 961g தேமாற்றநிறை உடையதாகக் காணப்பட்டது. இப்பொருளின் உண்மையான திணிவு,
1) 900g 2) 920g 3) 930g
4) 930.5g 5) 940g

83. ஒரு பலகையிலான எளிய பாலம் ஒன்றின் மீது ஒரு பையன் நிற்பதைப் படம் காட்டுகிறது. பலகை வளைந்து உள்ளது. இதனால் பலகையின் மீது இழுவையும் அல்லது உதைப்பும் ஆக்கப்படுகிறது. புள்ளிகள் X இலும் Y இலும் தாக்கும் விசைகளின் தன்மையை சரியாக வகை குறிப்பது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
Xஇல் விசை Y இல் விசை
1) உதைப்பு உதைப்பு
2) உதைப்பு இழுவை.
3) இழுவை உதைப்பு.
4) இழுவை இழுவை.
5) இழுவை பூச்சியம்.





84. மத்தியில் தாங்கப்பட்ட சீரான வளை ஒன்றைப்படம் காட்டுகிறது. வளையில் உள்ள அடையாளங்கள் 1m சம இடைவெளிகளில் உள்ளன. 6N, 2N சுமைகள் காட்டப்பட்டுள்ள தானங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன. பின்வருவனவற்றுள் எம் மேலதிக சுமை வளையை சம நிலையில் பேணும்,
1) X இல் 20N
2) Y இல் 6N
3) Y இல் 7N
4) Z இல் 4N
5) X இல்10N





85. ஒரு காவியினது பருமன் ஒரு போதும்,
1) நேராக இருக்காது. 2) மறையாக இருக்காது. 3) பின்னமாக இருக்காது.
4) ஓரலகாக இருக்காது. 5) பூச்சியமாக இருக்காது.


86. கரடான நிலத்திலும் ஒப்பமான நிலைக்குத்துச் சுவரிலும் ஓர் ஏணி சமநிலையில் இருப்பதைப் படம் காட்டுகிறது. முனை B இல் மறுதாக்கம் 30N ஏணியின் நிறை 40N ஆகும். முனை A இலுள்ள மறுதாக்கம்.
1) 30N 2) 40N
3) 50N 4) 60N
5) 70N




87. ஒரு புள்ளியில் தாக்கும் மூன்று விசைகளைப் படங்கள் காட்டுகின்றன. வரையப்பட்ட கோடுகள் விசைகளைப் பருமனிலும் திசையிலும் குறிக்கின்றன. எப்படம் சமநிலையைக் குறிக்கின்றது.




88. இலேசான கோல் ஒன்றைத் தாங்கும் சர்வசமான மூன்று விற்றராசுகளைப் படம் காட்டுகிறது. கோலுக்கு 60N சுமை இணைக்கப்பட்டுள்ளது. X,Z என்பன Yஇலிருந்து சமஇடைத்தூரத்தில் உள்ளன. பின்வரும் வாசிப்புக்களில் சரியானது எது?






| | X | Y | Z |
|---|---|---|---|
| 1) | 60N | 60N | 60N |
| 2) | 20N | 60N | 20N |
| 3) | 20N | 20N | 20N |
| 4) | 10N | 40N | 10N |
| 5) | 0 | 60N | 0 |

89. கிடையான மேசை ஒன்றின் மீது 10kg திணிவுடைய ஒரு குற்றி வைக்கப்பட்டுள்ளது. மேசைக்கும் குற்றிக்கும் இடையிலுள்ள உராய்வுக்குணகம் 0.2 ஆகும். குற்றியின் மீது கிடையாக 15N விசை பிரயோகிக்கப்படுகிறது குற்றியில் தாக்கும் உராய்வு விசை,
1) 10N 2) 15N 3) 20N
4) 25N 5) 30N

90. ஒவ்வொன்றும் 60N பருமன்களையுடைய இரு விசைகள் 120° கோணத்தில் தாக்குகின்றன. அவற்றின் விளையுள்,
1) 20N 2) 30N 3) $30\sqrt{3}$N
4) 60N 5) 120N


91. நிலைக்குத்துடன் 30°, 60° சாய்ந்துள்ள இரு இழைகளினால் ஒரு நிறை W தாங்கப்பட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. இழைகளிலுள்ள இழுவைகள் முறையே $T_1, T_2$ ஆகும். W சார்பாக இழைகளிலுள்ள இழுவைகளைக் காண்பதற்கு வரையப்படவேண்டிய விசை முக்கோணம் எது?








(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




92. ஒரு பொருள் O ஆனது மூன்று ஒருதள விசைகள் X,Y,Z இனால் சமநிலையில் பேணப்பட்டுள்ளது. Y இனது பருமன்,




1) X - Y
2) X tan θ
3) X Sin θ
4) X Cos θ
5) $\sqrt{X^2+Z^2}$

93. இணை ஒன்றின் திருப்பம் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. ஒரு காவிக்கணியமாகும்.
B. அத்தளத்திலுள்ள எந்தப்புள்ளி பற்றியும் மாறாப் பெறுமதி உடையது.
C. யூலில் அளக்கப்படும்.
இக்கூற்றுக்களில் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A,B மட்டும். 5) B,C மட்டும்.

94. வட்டப்பாதையில் இயங்கும் உடல் ஒன்றின் மீது தாக்கும் மையநாட்ட விசை,
A. உடலின் திணிவுக்கு நேர்விகிதசமன்.
B. உடலின் கதிக்கு நேர்விகிதசமன்.
C. பாதையின் ஆரைக்கு நேர்விகிதசமன்.
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A,B மட்டும். 5) A,B,C எல்லாம்.

95. $0.6rads^{-1}$ கோணக்கதியுடனும் $3ms^{-1}$ மாறாக்கதியுடனும் ஓர் உடல் வட்டப்பாதையில் இயங்குகிறது. அவ்வுடலின் திணிவு 2kg அதில் தாக்கும் மையநாட்ட விசை,
1) பூச்சியம். 2) 3.6N 3) 10N
4) 10.8N 5) 30N

96. $9rads^{-1}$ என்ற கோணக்கதியுடன் கிடையான வட்டப்பாதையில் செல்லும் ஒரு திணிவின் மீடிறன்,
1) 0.5Hz 2) 1.4Hz 3) 2.5Hz
4) 4Hz 5) 15Hz

97. ஒரு கிடையான வட்டத்தட்டு தனது மையத்தினூடாகச் செல்லும் நிலைக்குத்து அச்சுப் பற்றி சுழற்றப்படுகிறது. மையத்திலிருந்து r தூரத்தில் m திணிவுள்ள ஒரு சிறிய பொருள் வைக்கப்பட்டுள்ளது. பொருளானது அசையும் வரை படிப்படியாக தட்டின் சுழற்சி வீதம் அதிகரிக்கப்படுகிறது. ஒரு குறித்த கோண வேகம் ω இல் இது நிகழ்கிறது. இதைவிடக் குறைந்த கோணக் கதியில் தட்டு சுழற்றப்படும்போது பொருளானது இயங்கவேண்டும் எனின்,
A. r இனது பெறுமதியைக் கூட்டவேண்டும்.
B. பொருளுக்கும் தட்டுக்கும் இடையிலுள்ள உராய்வைக் குறைக்கவேண்டும்.
C. பொருளின் திணிவு m ஐக் குறைக்க வேண்டும்.
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) C மட்டும். 3) A,B மட்டும்.
4) B,C மட்டும். 5) A,B,C எல்லாம்.

98. சுழலும் வட்டமேசை ஒன்றில் உள்ள நுளம்பு வழுக்காது உள்ளது. இதற்குக்காரணம்,
1) உராய்வு மையநாட்ட விசையைச் சமப்படுத்துகிறது.
2) உராய்வு மையநாட்ட விசையை வழங்குகிறது.
3) ஈயின் நிறை மையநாட்ட விசையைச் சமப்படுத்துகிறது.
4) ஈயின் நிறை உராய்வு விசையை சமப்படுத்துகிறது.
5) ஈயின் நிறை மையநாட்ட விசையை வழங்குகிறது.


99. r ஆரையுடைய வட்டப்பாதையில் m திணிவுடைய ஒரு பொருள் ஒரு கோணக்கதி ω உடன் இயங்குகிறது. அப்பொருளின் இயக்கசக்தி,
1) $m\omega^2r^2/2$ 2) $\omega^2r^2/2m$ 3) $m\omega r^2/2$
4) $m\omega^2r/2$ 5) $m\omega^2/2$

100. m திணிவுடைய ஒரு சிறியபொருள் R ஆரையுடைய நிலைக்குத்துவட்டப் பாதையில் சுழற்றப்படுகிறது. அதியுயர் புள்ளியில் இழையானது மட்டுமட்டாக நீட்டப்படும் நிலையில் உள்ளது. அதி உயர் புள்ளியிலே பொருளின் கதி,
1) $(R/g^2)$ 2) R/g 3) gR
4) $\sqrt{gR}$ 5) 0

101. மேலே உள்ள வினாவில் அதி தாழ் புள்ளியில் பொருளின் கதி,
1) $\sqrt{gR}$ 2) $\sqrt{2gR}$ 3) $\sqrt{4gR}$
4) $\sqrt{5gR}$ 5) $\sqrt{6gR}$

102. இலேசான கோல் ஒன்று ஒரு முனையில் சுயாதீனமாகப் பொருத்தப்பட்டுள்ளது. அதன் மறு முனைக்கு m திணிவுள்ள ஒரு சிறிய துணிக்கை இணைக்கப்பட்டுள்ளது. இத்துணிக்கையானது r ஆரையுடைய கிடைவட்டத்தில் சுழலுமாறு செய்யப்படுகிறது. துணிக்கையின் கோணவேகம் ω ஆகும். கோல் நிலைக்குத்துடன் ஆக்கும் கோணம் α எனின், tan α இன் பெறுமதி,
1) $\omega/g$ 2) $r\omega^2/g$ 3) $r^2\omega/g$
4) $m\omega r^2/g$ 5) $m\omega r^2$

103. படத்தில் காட்டியுள்ளதுபோல் அரைக்கோளம் ஒன்றின் (ஒப்பமான) உச்சியிலிருந்து வழுக்கும் m திணிவுடைய பொருள் கோளத்துடனான தொடுகையை இழக்கும் உயரம் யாது? (கோளத்தின் ஆரை R)
1) 3R/2 2) 2R/3
3) 4R/3 4) 3R/5
5) 3R/7





104. $l$ நீளமுடைய இழை ஒன்றின் நுனிக்கு m திணிவுடைய ஒரு துணிக்கை இணைக்கப்பட்டு அது ஒரு மாறாக்கதி V உடன் இயங்குமாறு வட்டப்பாதையில் சுழற்றப்படுகிறது. இழையானது கைவிடப்படின் துணிக்கை இயங்கத்தொடங்கும் பாதை,
1) மையத்தை நோக்கி. 2) மையத்தை விலத்தி.
3) தொடலி வழியே வெளிநோக்கி.
4) கூடிய ஆரையுடைய வட்டப்பாதையில்.
5) அதே ஆரையுடைய வட்டப்பாதையில் தொடர்ந்து இயங்கும்.

105. ஒரு இழைக்கு இணைக்கப்பட்ட 2kg திணிவுடைய பொருள் ஒன்று 5m ஆரையுடைய கிடையான வட்டப்பாதையில் மாறாக்கோணக்கதியுடன் சுழல்கிறது. அதன் சுற்றல் காலம் 3s, $\pi^2 = 10$ எனின், இழையில் தாக்கும் இழுவை,
1) 20/9N 2) 40/9N 3) 400/9N
4) 800/9N 5) 1000/9N

106. ஒரு துணிக்கை இடஞ்சுழியாக ஒரு வட்டப்பாதையில் மாறாக்கதியுடன் இயங்குகிறது. துணிக்கை X இலிருந்து Y இற்கு செல்லும்போது அதன் வேகமாற்றத்தின் திசையைக் குறிப்பது,




107. O இலிருந்து m திணிவைத் தொங்க விடுவதன் மூலம் கூம்பூசல் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது. ஊசல் குண்டானது மாறாக்கதியுடன் சுழல்கிறது. ஊசற்குண்டின் மீது தாக்கும் விசைகளைச் சரியான முறையில் வகை குறிக்கும் படம் எதுவாகும்?




108. $l$ இயற்கை நீளமுடைய மீள்தன்மை இழை ஒன்றின் ஒரு நுனியில் ஒரு சிறு திணிவு இணைக்கப்பட்டு மறு நுனி ஒப்பமான கிடைமேசையிலுள்ள புள்ளிக்கு இணைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது திணிவு ஒரு கிடை வட்டப்பாதையில் இயங்குமாறு செய்யப்படுகிறது. $2l$ ஆரையுடைய வட்டப்பாதையில் இயங்கும்போது அதன் ஆவர்த்தன காலம் T ஆகும். திணிவு $3l$ ஆரை உடைய வட்டப்பாதையில் இயங்குமாறு செய்யப்படின் புதிய ஆவர்த்தன காலம்,
1) $\sqrt{3T/2}$ 2) $T\sqrt{3/2}$ 3) 3T/4
4) 4T/3 5) T

109. ஓர் இழைக்கு இணைக்கப்பட்ட 0.2kg திணிவுடைய ஓர் பந்து 0.5m ஆரையையுடைய நிலைக்குத்து வட்டத்தில் சுழல்கிறது. அது அதிதாழ் புள்ளியை $5ms^{-1}$ கதியுடன் தாண்டுகிறது. எனின் அப்போது இழையிலுள்ள இழுவை,
1) 2N 3) 8N 3) 10N
4) 12N 5) 16N

110. பூமியின் சராசரிக் கோண வேகம்,
1) $1 \times 10^{-7} rads^{-1}$ 2) $2 \times 10^{-7} rads^{-1}$ 3) $0.5 \times 10^{-7} rads^{-1}$
4) $1 \times 10^{7} rads^{-1}$ 5) $9.5 \times 10^{11} rads^{-1}$

111. பூமியின் ஒழுக்கின் சராசரி ஆரை $1.5 \times 10^{-11}m$ எனின் அதனது கதி,
1) $1.3 \times 10^{-18} ms^{-1}$ 2) $6 \times 10^{-18} ms^{-1}$ 3) $3 \times 10^{-18} ms^{-1}$
4) $2.25 \times 10^{-18} ms^{-1}$ 5) $7.5 \times 10^{-18} ms^{-1}$

112. 2kg திணிவுடைய துணிக்கை ஒன்று ஒப்பமான கிடைமேசை ஒன்றின் மீது மாறாக்கதியுடன் 1m ஆரையுடைய வட்டப்பாதையில் இயங்குகிறது. அது வட்டத்தின் மையத்துடன் ஒரு இழையினால் இணைக்கப்பட்டுள்ளது. இழைதாங்கக்கூடிய அதியுயர் இழுவை 32N ஆகும். துணிக்கையினால் 1 நிமிடத்தில் நிகழ்த்தக்கூடிய ஆகக்கூடிய சுழற்சிகளின் எண்ணிக்கை,
1) 38 2) 4 3) 76
4) 240 5) 16

113. r ஆரையுடைய வட்டப்பாதை ஒன்றில் m திணிவுடைய ஒரு சிறு துணிக்கை மாறாக் கோண வேகம் ω உடன் இயங்குகிறது. அதன் கோண உந்தம்,
1) $mr\omega/2$ 2) $mr^2\omega/2$ 3) $m\omega r^2/2$
4) $mr^2\omega^2/2$ 5) $m\omega r^2$

114. ஒரு கிடையான வட்டப்பாதையில் திரும்புவதற்கு விமானம்,
1) வட்டத்தின் மையத்திலிருந்து இறகை நோக்கி ஒரு விளையுள் விசை ஏற்படுமாறு விமானம் சரியவேண்டும்.
2) வட்டத்தின் மையத்தை நோக்கி நிறையின் கூறுவருமாறு விமானம் சரியவேண்டும்.
3) விமானத்தின் மீதான தடைவிசை குறையுமாறு விமானம் சரியவேண்டும்.
4) இறகுகளின் மீதான உயர்த்தும் விசையின் கூறு வட்டத்தின் மையத்தை நோக்கி இருக்குமாறு விமானம் சரியவேண்டும்.
5) விமானம் சரியவேண்டியதில்லை.

115. ஒப்பமான ஒரு கூம்புப் பாத்திரம் AB என்ற அச்சுப்பற்றி சுழல்கிறது. ஒரு மாபிள் பாத்திரம் சார்பாக அச்சிலிருந்து r தூரத்தில் ஓய்விலிருக்கிறது. மாபிளின் வேகம் V எனின் $V^2$ இன் பெறுமதி,
1) $grSin 30^0$
2) $gt tan 30^0$
3) $gr/tan 30^0$
4) $grCos 30^0$
5) $gr/Cos 30^0$



116. 3m ஆரையுடைய வட்டப்பாதையில் மாறாக்கதியுடன் இயங்கும் ஒரு துணிக்கையின் சுழற்சிக் காலம் 2s அத்துணிக்கையினது மையத்தை நோக்கிய ஆர்முடுகல்,
1) $3/4ms^{-2}$ 2) $4/3ms^{-2}$ 3) $3ms^{-2}$
4) $30ms^{-2}$ 5) $48ms^{-2}$

117. இலேசான நீளா இழைக்கு இணைக்கப்பட்ட 0.1kg திணிவுடைய ஒரு துணிக்கை 1m ஆரை உடைய ஒரு நிலைக்குத்தான வட்டப்பாதையில் $5ms^{-1}$ மாறாக்கதியுடன் இயங்குகிறது. பாதையின் அதியுயர் புள்ளியில் இழையிலுள்ள இழுவை,
1) 0.5N 2) 1N 3) 1.5N
4) 3.5N 5) 15N

118. R ஆரையுடைய வட்டப்பாதையில் m திணிவுடைய ஒரு கார் இயங்குகிறது. சில்லுகளுக்கும் கிடைப்பாதைக்கும் இடையிலுள்ள உராய்வுக்குணம் μ எனின், பக்கமாக வழுக்காது கார் இயங்கக்கூடிய அதியுயர் கதி,
1) $\sqrt{\mu Rg}$ 2) $\sqrt{2\mu Rg}$ 3) $\sqrt{\mu R/g}$
4) $\sqrt{3\mu Rg}$ 5) $\sqrt{\mu g/R}$

119. சுயாதீனமாக சுழலும் சுழல்மேசை ஒன்றின் மையத்திலிருக்கும் r தூரத்தில் m திணிவுடைய ஒரு நாணயம் வைக்கப்பட்டுள்ளது. மேசைக்கும் நாணயத்திற்குமிடையிலுள்ள அதியுயர் உராய்வு விசை mg/2 மேசையின் கோண வேகம் உறுதியாக அதிகரிக்கப்பட்டது. நாணயம் வழுக்க ஆரம்பிக்கும்போது மேசையின் கோணவேகம்,
1) $\sqrt{g/2r}$ 2) $\sqrt{mg/2r}$ 3) $\sqrt{g/2r}$
4) $\sqrt{gr/2}$ 5) $\sqrt{mgr/2}$

120. ஒரு கார் மாறாக்கதியுடன் ஒரு வட்டப்பாதையில் இயங்குகிறது.
A. காரின் மீது தாக்கும் விசையின் பருமன் மாறாதுள்ளது.
B. கார் ஆர்முடுகுகிறது.
C. காரின் மீது தாக்கும் சமப்படுத்தப்படா விசை பூச்சியம்.
இக்கூற்றுக்களில் சரியானவை,
1) A மட்டும். 2) A,B மட்டும். 3) B,C மட்டும்.
4) C மட்டும். 5) A,B,C எல்லாம்.

(முற்றும்)

ஆசிரியர்: [illegible].சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip.in.Edu, Dip.in.IT
கொ/விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு-13. T.P:077-7550332



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் இன்று முதல் புதிய இடத்தில் இயங்கும்

வலி.வடக்கு,மே19

காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் இன்று புதன்கிழமை முதல் தனியான ஒரு கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் நடேஸ்வராக் கல்லூரியுடன் இணைந்து தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவந்த இந்தப் பாடசாலை இன்று புதன்கிழமை முதல் காங்கேசன்துறை வீதியில் உள்ள எட்டாம் கட்டைக்கு முன்னால் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தின் இந்தக் கட்டடத் திறப்பு விழா அதிபர் திருமதி ரோ.தயானந்தன் தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

ஆசியுரைகளை துர்க்காதேவி ஆலய பிரதம சிவாச்சாரியார் வா. அகிலேஸ்வரக் குருக்கள், துர்க்காதேவி ஆலய தலைவர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்குவர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் சு.முரளிதரனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கலந்துகொள்வார்கள்.

(50-86)




உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 648 திகதி 17-05-2010

வெற்றி எண்கள்

05 07 30 51 I

ஜக்பொட் பரிசு ரூ. 19,691,230/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 19,691,230/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 312 | 1,000/= | 312,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 545 | 1,000/= | 545,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12834 | 60/= | 770,040/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6121 | 40/= | 244,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154609 | 20/= | 3,092,180/= |
| | | மொத்தம் ரூ. | 5,792,060/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே ஷூசனாவின் மூலம் "லக்கி 7" தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றுவதற்காக தகுதி பெற்ற அதிஷ்டசாலிகள்

U.L. மொஹமட் ஷாரூக் - சம்மாந்துறை.

R. சோமபால பண்டா - கெகிராவை.

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 600029415-4-44 |
| மட்டக்களப்பு | 600028818-4-16 |
| களுத்துறை | 600030301-4-22 |
| கம்பஹா | 600031624-4-48 |
| திருகோணமலை | 600029716-4-46 |
| பதுளை | 600028176-4-06 |
| புத்தளம் | 600026616-4-17 |
| மாத்தளை | 600023215-4-26 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,192,060/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 20,107,930/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மே 20 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335467


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே 19

நெல்லியடி, தடங்கன் புளியடி முருகமூர்த்தியாலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.

(50-204)

* * *

யாழ்ப்பாணம்,மே 19

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு சந்திரபுரம் மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

(50-204)

* * *

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம், திருவண்ணை நகர், கில்னர் ஒழுங்கை மகா மாரி அம்பாள் ஆலயத்தின் அலங்காரத்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.

(204)


## தரம் 5 மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கையில் உள்ள பிரபல - முன்னணி ஆசிரியர்களின் கற்பித்தல் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

## புலமைச் சுடர்

நாளை முதல் வாரந்தோறும் உங்கள் அபிமான சுடர் ஒளி - கல்விச்சுடர் தயாரித்து வெளியிடும்

வியாழன் தோறும்

10 ரூபா விலையில்

### தரம் 5,4 மாணவர்களுக்கான முன்னோடிக் கையேடு

* முழுமையான மாதிரி வினாத்தாள் - தரம் 05
* அடிப்படை மாதிரி வினாத்தாள் - தரம் 04
* பாடரீதியான வினாத்தொகுப்பு
* இலகுவழிக் கற்றல் குறிப்புக்கள்

இன்னும் பல விடயங்களுடன்

அனைத்துப் பிரபல்ய ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் ஒருவார கால ஆக்கங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட ஒரேயொரு முன்னோடி கற்றல் கையேடு

உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே அருகில் உள்ள உதயன் பத்திரிகை விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு:
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.
021-5677222
(விநியோகப் பிரிவு)
011-5738855
071-4273035 (ஆசிரியர்)


# மரண அறிவித்தல்

## திருமதி தனபாலசிங்கம் தையல்நாயகி [இராசமணி]



தெல்லிப்பழை,கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலசிங்கம் தையல்நாயகி 12.05.2010 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் அவர்களின் மனைவியும், தவரஞ்சிதம், தயாரஞ்சிதம், தனரஞ்சிதம், அம்பிகைதாசன், சிவதாசன், குமரதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வைகுந்தநாதன், ஸ்ரீகாந்தன்,சிவகுமார், குமுதினி, விக்னேஸ்வரி,முகுந்தினி ஆகியோரின் மாமியும்,இரத்தினசிங்கம், செல்வநாயகம், காலஞ்சென்ற கனகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அமுதலிங்கம், அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும், வசீகரன்,பிரதீபன், கௌசிகன்,சிவகௌரி, காலஞ்சென்ற கௌரிதாசன் துளசி,வாசுகி,பிரபு, கிருத்திகா,கவிராஜ், சகாணன், தேனகா,குகரூபன்,ஜஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மஹிந்த மலர்ச்சாலையில் 21.05.2010 வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும். அதன்பின்னர் 23.05.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8 மணி அளவில் மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

102 - 5/1, Manning Place,
Colombo - 06.
T.P : 0112364449

தகவல்:
குடும்பத்தினர்,
[98316] த.சிவதாசன்(மகன்).

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஷ்ணலீலாதேவி பரமானந்தம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணலீலாதேவி பரமானந்தம் 16.05.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்து பரமானந்தம் (சாமியார் ஆஞ்சநேயர் கோயில், பாண்டியன்தாழ்வு) அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தாவின் (ஜேர்மனி) அருமைத் தாயாரும் ஜெகசிற்பியனின் (அப்பன்) அருமை மாமியும் செல்லா, பாலா, பபா, பாபு, பேபி, பபி, கண்ணன், நமணன் ஆகியோரின் சிறிய தாயும் கிருஷ்ணபிள்ளை, விசாலாட்சி ஆகியோரின் சம்பந்தியும் சரண்ஜா (ஜேர்மனி), குணால் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.05.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப.3 மணிக்கு தகனக் கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாண்டியன்தாழ்வு,
கொழும்புத்துறை. (98516)

தகவல்:
சி.பரமானந்தம் சுவாமியார்
(ஆஞ்சநேயர் கோயில்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் சம்பளம் நிறுத்தப்பட்டால் நடவடிக்கை பிரதிஅமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 19

தோட்டத் தொழிற்சாலைகளில் கொழுந்தை ஏற்காது திருப்பி அனுப்பினால் தொழிலாளர்கள் அலட்டிக் கொள்ளத் தேவை இல்லையென்றும் அது முற்றிலும் நிர்வாகத்துக்குரிய பொறுப்பாகுமென்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் பிரதியமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

தொழிலாளர்கள் சம்பளத்திற்காகப் பறித்த கொழுந்தை தொழிற்சாலைக்கு அனுப்பி வைத்து மேலதிகப் பணியைச் செய்யவேண்டியது தோட்ட நிர்வாகியின் பொறுப்பாகும். கொழுந்து ஏற்கப்பட்டாலும் திருப்பி அனுப்பப்பட்டாலும் தொழிலாளர்கள் பாதிப்படையக் கூடாது. அதனால் எவருக்காவது சம்பளம் நிறுத்தப்பட்டுப் பாதகம் ஏற்பட்டால் காங்கிரஸுக்கு முறையிடலாமென்றும் பிரதியமைச்சர் சிவலிங்கம் குறிப்பிட்டார்.

ஹற்றன் லெதண்டி,கார்பெக்ஸ் தோட்டங்களில் கடந்த இரண்டு நாள்களாகத் தொழிலாளர்கள் பறித்த கொழுந்து தொழிற்சாலையில் ஏற்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் தோட்டங்களில் தொழிற்சாலை இயங்காததால் வேறு தோட்டங்களின் தொழிற்சாலைகளுக்கே கொழுந்து அனுப்பப்படுகிறது. ஆனால், கடந்த இரண்டு தினங்களில் இடப்பற்றாக்குறையின் காரணமாக கொழுந்து ஏற்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாகத் திருப்பி அனுப்பப்படுவதாகவும் இதனைக் காரணமாகக் கூறி தொழிலாளர்களின் சம்பளம் குறைக்கப்படுவதாக கார்பெக்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கிறார்கள். (ளி)

## கண்டி மாவட்டத்தில் உற்பத்தியாகும் வாசனைத் திரவியங்களுக்கு கிராக்கி

கண்டி,மே 19

கண்டி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாரம்பரிய வாசனைத்திரவியங்களுக்கு இப்போது நல்ல விலை கிடைத்து வருகிறது.

உலர்ந்த சாதிக்காய் ஒரு கிலோ 500 ரூபாவாகவும், சாதி பத்திரி (வசா வாசி) ஒரு கிலோ ஆயிரத்து 600 ரூபாவாகவும், மிளகு 350 ரூபாவாகவும்,கராம்பு கிலோ 650 ரூபாவாகவும் விற்பனையாகின்றன.

எனினும் தற்போது நிலவும் கால நிலை காரணமாக அவற்றை வாசனைத் திரவியங்களை உலர்த்துவதில் மக்கள் சிராமங்களை எதிர்கொள்கின்றனர். (ளி)

# 20 ஆண்டுகள் திருத்தப்படாத நெடுஞ்சாலை; மஸ்கெலியாவில் 10 ஆயிரம் குடும்பங்கள் அவதி

மஸ்கெலியா, மே 19

மஸ்கெலியா - காட்மோர் தோட்டம் வரையான நெடுஞ்சாலை கடந்த 20 ஆண்டுகளாக செப்பனிடப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த நெடுஞ்சாலை சுமார் 16 கிலோ மீற்றர் நீளமுடையது. இதில் 6 கிலோ மீற்றர் தூரமுடைய நெடுஞ்சாலை நோர்வூட் வீதி அதிகார சபையின் கீழும், 10 கிலோ மீற்றர் நெடுஞ்சாலை மத்திய மாகாண வீதி அதிகார சபையின் கீழும் உள்ளன.

இவ்வீதியை ஊடறுத்துச் செல்லும் வழியால் காட்மோர் தமிழ் வித்தியாலயம், எடம்ஸ்பீக் தமிழ் வித்தியாலயம், மொக்கா தமிழ் மகா வித்தியாலயம், மிட்லோதியன் தமிழ் வித்தியாலயம், டீசைட் தமிழ் வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளும் காட்மோர் தோட்டத்தின் 5 பிரிவுகள், மொக்கா தோட்டத்தின் 4 பிரிவுகள், டீசைட் தோட்டத்தின் 2 பிரிவுகள் அடங்கலாக 3 தோட்டங்களும் உள்ளன.

இப்பகுதியில் 10ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இம்மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்களுக்குச் செல்வோர் சொல்லொணாத் துயரங்களை அடைகின்றனர்.

மேலும் இந்த மூன்று தோட்டங்களினதும் அவசர நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள், ஏனைய நோயாளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் இல்லை. தோட்டங்களில் உள்ள தேயிலைக் கொழுந்துகளை ஏற்றும் லொறிகள் மூலமே வைத்திய சாலைக்கு கொண்டுவரவேண்டியுள்ளது.

மேலும் பஸ் சேவைகளும் முறையாக இல்லை. அப்படியே பஸ் சேவை நடைபெற்றாலும் அதிகளவில் பணம் கொடுத்துச் செல்லவேண்டியுள்ளது என மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர். (ளி)

# தேயிலைக் கொழுந்துகள் வீணடிப்பு: தொழிலாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

கொழும்பு, மே 19

தாம் பறிக்கும் தேயிலைக் கொழுந்தினை உரிய வகையில் அரைத்துத் தமக்குரிய வருமானத்தினை உறுதிப்படுத்தாத தோட்ட நிர்வாகத்திற்கெதிராக லெதண்டி, காபெக்ஸ், மால்புரோ, புரோடக் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஹற்றன் - நோர்வூட் பிரதான பாதையில் வனராஜா பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கூடி கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

மேற்படித் தோட்டங்களிலுள்ள இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுள்ளன. இதனால் இந்தத் தோட்டங்களில் பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்துகள் வனராஜா, நோர்வூட், கெம்பிய, கொட்டியாக்கலை, பொகவந்தலாவை, பெற்றசோ, பொகவான போன்ற தோட்டங்களிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டே அரைக்கப்படுகின்றன.

இவ்வாறு மாற்றுத் தேயிலைத்தொழிற்சாலைகளுக்கு தேயிலைக் கொழுந்துகள் கொண்டு செல்லப்படுகின்றபோது, கழிவு என்ற ரீதியில் நூற்றுக்கணக்கான கிலோ தேயிலைக் கொழுந்துகள் கழிக்கப்படுவதாக இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''கடந்த ஒருமாத காலமாக மேற்படி தோட்டங்களில் இருந்து கொண்டுச் செல்லப்படுகின்ற தேயிலைக் கொழுந்துகளில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரம் கிலோ என்ற ரீதியில் தேயிலைத் தொழிற்சாலைகளில் அரைப்பதற்கு மறுக்கப்பட்டதாகக் கூறி அவற்றைத் தோட்டங்களில் கொட்டும் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இதன் காரணமாக தோட்ட நிர்வாகம் மேலதிக கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றது. அத்துடன், எமது மேலதிக வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்காக நாளொன்று 35 கிலோ தொடக்கம் 40 கிலோவரை நாம் கொழுந்து பறிக்கின்றோம். எனினும், நாளொன்றின் சம்பளத்துக்குரிய 18 கிலோ கொழுந்தைத் தவிர மேலதிகமாக எதனையும் எம்மால் பெற முடிவதில்லை'' என்றனர்.

பொகவந்தலாவை பெருந்தோட்டக் கம்பனிக்குட்பட்ட லெதண்டி,பெக்ஸ், மால்புரோ, புரோடக் ஆகிய தோட்டங்களில் இடம்பெறும் இத்தகைய அவலங்கள் தொடர்பாக கம்பனியின் உயரதிகாரிகளுக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சில தோட்டங்களில் கொழுந்து இல்லாத காரணத்தினால் தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்டக் கம்பனிகளுக்கும் வருமானமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தோட்டத்தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட கம்பனியின் உயர்மட்டத்திற்கு தமது அவல நிலையைத் தெரியப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியே தாம் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டதாகத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ளி)

## எல்பியன் தோட்டத்தில் தீ; 12 வீடுகள் பாரிய சேதம்!

கொழும்பு, மே 19

நுவரெலிய மாவட்ட அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்பியன் தோட்ட ஆட்லோ பிரிவில் கடந்த சனிக்கிழமை காலை ஏற்பட்ட தீவிபத்தினால் 12 வீடுகளை கொண்ட லயன் குடியிருப்பொன்று எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தினால் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை.எனினும், தொழிலாளர் குடும்பங்களின் உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தினால் மக்கள் தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குமாறு நுவரெலிய மாவட்ட செயலாளர் பி.ஜீ. குமாரசிறி உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த விபத்துமின்சார ஒழுங்கினால் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ளி)

# பூஜாப்பிட்டிய பிரதேச சபைப் பிரிவில் மழைநீரும், கழிவு நீரும் பாதை வழியே

## மக்கள் விசனம்

கண்டி, மே 19

பூஜாபிட்டிய பிரதேச சபைப் பிரிவில் உள்ள அங்கும்புற, பூஜாபிட்டிய பாதையில் வடிகான்கள் முறையாகத் துப்புரவு செய்யப்படாத காரணத்தால் மழை நீரும், கழிவு நீரும் பாதை வழியே வழிந்தோடுகின்றன எனப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். அங்கும்புற, பூஜாபிட்டிய வீதி திருத்தி அமைக்கப்பட்டபோதும், கான்கள் முறையாகப் பராமரிக்கப்படாமையால் பாதைக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது எனக் கூறுகின்றனர். (ளி)

## கண்டியில் கடும் மழையால் பயிர் வகைகள் பாதிப்பு

கண்டி, மே 19

கண்டி மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக அநேக பயிர் வகைகள் பாதிப்படைந்துள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஹங்குரன்கெத்த, வலப்பனை பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காய்கறி உற்பத்திகள் உடதும்பற, உண்ணஸ்கிரிய, தெல்தெனிய போன்ற பகுதிகளில் மேற்கொண்ட மரக்கறி உற்பத்திகள்போன்ற பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். (ளி)




# நுவரெலியா மாவட்டத்தில் 2,800 வீட்டுத் தோட்டங்கள்

கண்டி, மே 19

நுவரெலியா மாவட்டத்தில் 2,800 வீட்டுத் தோட்டங்களை அமைக்க மத்திய மாகாணசபை விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கமநலசேவை பிரதி ஆணையாளர் மேனக ஹேரத் தெரிவித்தார்.

கிராம அதிகாரி, பிரதேச செயலாளர், மாவட்டம், மாகாணம் என்ற பல்வேறு மட்டங்களில் நடத்தப்பட்டுவரும் வீட்டுத் தோட்டப் போட்டிக்கு முன்னோடியாகவே இவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

இதைவிட அரசின் உற்பத்தி வேலைத் திட்டத்தை ஊக்குவிப்பதுடன், சமூக ரீதியாக பொழுதுபோக்கு மற்றும் வாழ்வாதார வழி முறை போன்ற தேவைகளையும் இது நிறைவு செய்கின்றன.

தனிநபர் பலரது கூட்டுமுயற்சி நாட்டின் நலனை முன்னெடுக்கவும் உதவுவதாகவும் கூறினார். வீட்டுத்தோட்டப் போட்டியாளர்களுக்கு 500 ரூபா பெறுமதியான நாற்றுக்களும், விதைகளும் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ளி)

## ஹரிஸ்பத்துவத் தொகுதியில் குடிதண்ணீர் இன்றி மக்கள் அவதி

கண்டி, மே 19

மகாவலி கங்கையை அடுத்துள்ள ஹரிஸ்பத்துவத் தொகுதியின் சில பகுதிகளுக்கு குடிதண்ணீர் வசதி இன்றி பொது மக்கள் சிரமப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் இரண்டாவது அதிபெரிய நீர்விநியோகத் திட்டமும் இப்பிரதேசத்திலேயே உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக போகஹகந்த, யடியலகல, உடகம, மஹதென்ன, குருந்து கஹமட, யஹலதென்ன போன்ற 15 கிராமங்களைச் சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்கள் குடிதண்ணீர் இன்றி அவதிப்படுகின்றனர். (ளி)

# பேராதனைப் பல்கலை வளாகத்திலிருந்த சந்தனமரம் களவாடப்பட்டுள்ளது

கண்டி, மே 19

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த பெறுமதிமிக்க வெள்ளை சந்தன மரமொன்று வெட்டப்பட்டு களவாடப்பட்டுள்ளது என பேராதனைப் பொலிஸில் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவி னர் முறையிட்டுள்ளனர்.

பேராதனை சரசவி உயன ரயில் நிலையத்தில் இருந்து பல்கலைக்கழக வளாகத்தில் பிரவேசிக்கும் பிரதான கடவை அருகே இரட்டைத் தண்டுகளைக்கொண்ட இப்பாரிய சந்தன மரம் இருந்ததாகவும், அது களவாடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் நீர் விநியோகத் திட்டம் இழுபறியாம்

கண்டி, மே 19

ஹாரிஸ்பத்துவ தொகுதியிலுள்ள கலுவான நீர்விநியோகத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் இன்னும் பூர்த்தியடையாது காணப்படுவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இதன் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளபோதும் மின்சார இணைப்பு மேற்கொள்ளப்படாத காரணத்தால் அது ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என பூஜாபிட்டிய பிரதேச சபை தெரிவிக்கின்றது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை



ஈரைந்து மாதங்கள்
தன்னுயிரை மறந்திருந்தாள் - எம்முயிரை
தன்னுயிர் போல் நினைந்திருந்தாள்

தனக்காக உணவில்லை
தனக்காக உணர்வில்லை - தம் பிள்ளைக்காய்
பத்தியமாய் வாழ்ந்திருந்தாள்

உயிர் கொடுத்தாள்
உடல் கொடுத்தாள்
உணர்வு கொடுத்தாள்
மகள் வாழ்வை - தன் வாழ்வாய்
நினைந்திருந்தாள்

தன் பெண்மையின்
பரிபூரணமே
இவள் தான் என்றாள்

நாம் மெத்தையில் படுப்பதற்காய் - அவள்
முள்ளிலே படுத்திருப்பாள்
நாம் வெந்நீரில் குளிப்பதற்காய் - அவள்
தீயாய் எரிந்திடுவாள்

அவள்
உருகி உருகி
தவம் செய்வாள்
மெழுகுவர்த்தி போல்
தம் பிள்ளையின் வாழ்வுக்கு
ஒளி கொடுக்கவென

அவள்
தவம் செய்து பெற்ற
வரமே - இன்று
சாபமாய்
முதியோர் இல்லங்களில்
தவிக்கின்றாள்

நாம் உலகத்தைப் பார்க்கவென - தன்
கண்ணையே தந்தவளின்
கண்களைக் குத்திவிட்டு
குருடு என்று பிதற்றுகின்றோம்

அன்பான நண்பர்களே
அன்பான மகவுகள் நாம்

அன்னைதனைக் காப்போம் - அவள்
அருமைதனை உணர்வோம்

அன்னையே தெய்வம் - அவள்
அடி தொழவே இன்பம்.

பி.எஸ்.சுகர்ணன்,
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்,
வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணக் கல்லூரி.




# மனிதனை மிஞ்சும் அதிநவீன ரோபோ


காலத்தின் வேகமான வளர்ச்சி இயந்திர மனிதன் பூமியில் கால் வைத்துவிட்டான். மனிதனைப் போலவே அனைத்து செயல்களும் எந்தக் குழப்பமும் இல்லாமல் சொன்னதை அப்படியே செய்கிறான். நாளுக்கு நாள் வளர்ந்துவரும் இந்தப் ரோபோ வளர்ச்சியில் தற்போது ஜப்பானில் சிறப்பு ரோபோ ஒன்றை வடிவமைத்துள்ளனர். இதன் பெயர் நேஓ மற்ற ரோபோட்டில் இல்லாத சிறப்பு இதில் என்ன இருக்கிறது என்றால் எந்தப் பக்கமும் சாய்வாக அதேசமயம் நுட்பமாகத் தன் உடலை எல்லாப் பக்கமும் எல்லாக் கோணத்திலும் இயக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்தப் பிரச்சினைதான் பெரிதாக இருந்தது.

அது மட்டுமல்ல தரையில் இருக்கும் பொருள்களை அழகாகக் குனிந்து எடுத்து அதைக் குப்பைக் கூடையில் போடும் அரிய சோதனைக் காட்சியையும் தத்ரூபமாகக் காட்டியுள்ளனர். கீழே விழுந்தால் எளிதாக எழுந்து விட முடியாது என்ற நிலையையும் மாற்றி உடனடியாகத் தன் கைகளைத் தரையில் வைத்து அழகாக எழுகிறது.53 சென்றிமீற்றர் உயரமுடைய இந்த ரோபோட் செய்யும் செயல்கள் அனைத்தும் பிரமிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு இது விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சி.பகலவன்,
சுன்னாகம்.



# வியர்வைச் சுரப்பிகளுடன் செயற்கைத் தோல் தயாரிப்பு



உடலில் தீக்காயங்கள் ஏற்பட்டு தோல் பாதிக்கப்படு பவர்களுக்குப் பயன்படுத்த செயற்கைத் தோல் தயாரிக்கும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அவற்றை வியர்வைச் சுரப்பிகளுடன் கூடியவைகளாக தற்போது தயாரித்துள்ளனர்.


சீனாவில் பெய்ஜிங் நகரில் உள்ள ஒரு வைத்தியசாலையின் தலைவர் ஷியாபிங் பூ மற்றும் அவரது குழுவினர் இந்த செயற்கைத் தோலைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் தோலை எலிகளுக்குப் பொருத்தி ஆய்வு நடத்தினர். எலிகளின் தோல் பகுதியில் வளர்ச்சி அடையாத கெரடினாக்கிட்ஸ் செல்களின் மேல் பகுதியில் வியர்வைச் சுரப்பி செல்களைப் பரப்பி ஏற்கனவே தயாரித்த செயற்கைத்தோலைப் பொருத்தினர்.

அவை இரண்டு வாரத்தில் செயற்கைத் தோலுடன் சேர்ந்து வளர்ச்சி அடைந்தன. இதனால் வியர்வை சுரந்து உடல் குளிர்ச்சி அடைந்தது. எனவே, இந்தமுறையில் வியர்வைச் சுரப்பியுடன் கூடிய செயற்கைத் தோல் தயாரிக்க முடியும் என விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

க.பிறேமினி,
உடுவில்.

# ஆயுள் முழுக்க எலும்பு வலிமை




சிறுவயதில் போதுமான கல்சியத்தை உணவில் சேர்த்து வந்தால் எலும்புகளைப் பாதுகாப்பதுடன் ஆயுள் முழுவதும் எலும்பு ஆரோக்கியம் நீடிக்கும் என்று அமெரிக்க ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு கரோலினா மாநில பல்கலைக்கழகத்தில் 18 நாள்கள் ஆய்வு நடத்தப்பட்டது. அது குறித்து ஆய்வுக்குழுப் பேராசிரியர் சாத் ஸ்டல் கூறியதாவது:

வாழ்நாள் முழுவதும் எலும்பு ஆரோக்கியம் நீடிக்கச் செய்வதில் கல்சியத்தின் பங்கு பற்றி ஆராயப்பட்டது. பன்றிக் குட்டிகளை இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தினோம். 24 பன்றிக் குட்டிகள் தேர்வு செய்யப்பட்டு இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டன. ஒரு குழுவின் உணவில் கல்சியம் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது.

மற்றொரு குழுவில் இருந்த பன்றிக் குட்டிகளுக்கு கல்சியம் குறைவான உணவுகள் அளிக்கப்பட்டன. 18 நாள்களுக்குப் பிறகு 24 பன்றிக் குட்டிகளின் எலும்பு ஆரோக்கியம் பரிசோதிக்கப்பட்டது. கல்சியம் அதிகம் கொண்ட உணவைச் சாப்பிட்டவற்றை விட குறைவாகச் சாப்பிட்ட குட்டிகளின் எலும்பு அடர்த்தி குறைவாக இருந்தது.

அத்துடன், எலும்புக்குள் இருக்கும் மச்சையில் ஸ்டெம் செல்கள் கொழுப்பாக மாறி இருந்தன. கல்சியம் செறிந்த உணவு சாப்பிட்ட குட்டிகளின் எலும்பு மச்சைகள், எலும்பை உறுதியாக்கும் செல்களாக மாறியிருந்தன. எனினும், பெரியவர்களின் இரத்தத்தில் கல்சியத்தை முறைப்படுத்தும் விட்டமின் டி யின் ஹார்மோன்கள் குறித்து இரண்டு குழுக்களின் இரத்தப் பரிசோதனையில் எந்த மாற்றமும் தெரியவில்லை.

குழந்தை பிறந்ததில் இருந்து கல்சியம், மினரல்கள் உடலில் சேர்த்தால் குழந்தைகளின் எலும்பு வளர்ச்சி சிறப்பாக இருப்பதுடன், வாழ் நாள் முழுவதும் எலும்பு ஆரோக்கியம் நீடிக்க உதவும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது என சாத் ஸ்டெல் தெரிவித்தார்.

வி.சண்முகி,
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org